உ

சிவமயம்



# வள்ளிமலர்

அமரர் திருமதி வள்ளியம்மை ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்டது.

08.05.1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர்

### திருமதி. வள்ளியம்மை அருள்பிரகாசம் அவர்கள்



## திதி வெண்பா

ஈசுர ஆண்டு திங்கள் பங்குனிசேர் பூர்வபக்கம்
மாசில்சீர் துவாதசித் திதியதனில் - பேசுபுகழ்
மஞ்சவனப்பதியூர் மாண்பினள் வள்ளியம்மையவள்
தஞ்சமடைந்தாள் சண்முகன்தாள்

**தோற்றம்**
**17-05-1939**

**மறைவு**
**08-04-1998**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

எம்மூரின் தாயாக எழிலாய் அமர்ந்தவனே
மஞ்சவனப்பதி முருகா
எம்பதி ஆண்ட அன்னை என்றும் உன்
நினைவு தன்நெஞ்சை ஆட்டுவிக்க
மாய உலகில் அவள் ஊன உடல் உழன்று
ஊனம் உருக்குலைந்து ஓய்வு தேடி உங்கு
உன் பதி ஏகி விட்டாள்
எம்தாயை இனித் தேடி
நாம் எங்கும் அலையமாட்டோம்
அவள் என்றும் உன் அருகில்
நித்திய ஓய்வெடுப்பாள்

எங்கள் குலதெய்வத்தின் கொழுந்தாய்
எங்கள் எல்லோருக்கும் வழிகாட்டியாய்
தந்தையின் வழிநடந்து தருமம் பல புரிந்தவளாய்
துணைவரின் வழி நின்று தொல் புகழ் படைத்தவராய்
எம்மனோர் இதயங்களில் என்றும் நீங்காதவராய்
ஊரவர் உள்ளங்களில் உறைந்து வாழ்பவராய்
பாரோர் புகழ்ப் பணிபல ஆற்றியவராய்
சீரும் சிறப்பும் பேரும் புகழும் பெற்றுவாழ்ந்த
அமரர் திருமதி வள்ளியம்மை அருள்பிரகாசம் அவர்களுக்கு
**"வள்ளி மலர்"** என்னும் இந்நினைவுமலரை
வள்ளி தெய்வயானை சமேத மஞ்சவனப்பதி முருகனின்
திவ்விய பாதாரவிந்தங்களில் பணிவுடன் சமர்ப்பித்து அவரின்
திருவருள் துணைகொண்டு காணிக்கையாக்குகின்றோம்.

**குடும்பத்தினர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகக்கடவுள்

-விருத்தம்-

மண்ணுலகத்தினிற் பிறவிமாசற
எண்ணியபொருளெலா மெளிதின்முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்றுமாமுகப்
பண்ணவன்மலரடிப் பணிந்துபோற்றுவாம்.

திருவுங்கல்வியுஞ் சீருந்தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையைக்காய்க்கவும்
பருவமாய்நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப்பிள்ளையைப் பேணுவாம்.

நல்லசொற்பொருணாளுநடாத்தவும்
எல்லைகாணரும் பேரின்பமெய்தவும்
வெல்லும்யானை முகத்தினை மேவிவாழ்
வல்லபைக்குரியானை வழுத்துவாம்.

உள்ளமெனும் கூடத்திலூக்கமெனுந்
தறிநிறுவியுறுதியாகத்
தள்ளரியவன் பென்னுந்தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினைப்பசு போதக்கவளமிடக்
களித்துண்டுகருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்திவேழத்தை
நினைந்துவரு வினைகடீர்ப்பாம்.

வாலுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர் பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

## திருவிசைப்பா

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்

## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டு கொண்டன்புற் றிடுவேனே
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங்குன்றிற் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பதிகம்

புலவர் த. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் பாடியது

## வெண்பா

உலகந் தழைக்குமுதல் ஓங்கார ரூபம்
இலகுந் திருவுருவத் தெந்தை பலவமரர்
வந்துபணி யைந்துகர மஞ்சவனக் கற்பகத்தின்
கந்தமலர்ச் செஞ்சரணங் காப்பு

## கட்டளைக் கலித்துறை

திருவுந் தருங்கல்வி சீருந் தருந்தெய்வ சிற்சுகமாம்
குருவா யிருந்தருள் நல்கிடு மன்பர் குறையகற்றும்
மருவார் மலர்ப்பொழில் சூழ்ந்தாரு மஞ்ச வனப்பதியின்
முருகா நினதரு ளென்றனைக் காத்திட முன்னிற்குமே.

திருமான் மருகா சிவனார் குமரா தினைப்புனத்தில்
உருவான வள்ளி மணவாள என்றுனை ஓதுபவர்க்
கிருமா நிதியருள் மஞ்சவனத்தி லிருந்தருளும்
முருகா நினதரு ளென்றனைக் காத்திட முன்னிற்குமே.

கருணா கரன்குகன் அன்பரை நாடொறுங் காத்தருளும்
பெருமா னெனமறை யாகம சாத்திரம் பேணிமகிழ்
வருமா தவர்துதி செய்திட மஞ்ச வனத்துறையும்
முருகா நினதரு ளென்றனைக் காத்திட முன்னிற்குமே.

அருவா யருவுரு வாயுருவாகி யருள் பெருக்குங்
குருவா யுறையுங் குமரா வெனவன்பர் கூட்டமுடன்
மருவார்வ மோடு துதிசெய்ய மஞ்ச வனத்துறையும்
முருகா நினதரு ளென்றனைக் காத்திட முன்னிற்குமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவே யயனைத் தலையினிற் குட்டிக் குடிலையுரை
தருவா புனைத்தனி யிற்பணி வோர்க்கிடர் தாம்புரிய
வருவார் தமக்குநன் மாமதி யீந்தருள் மஞ்சவன
முருகா நினதரு ளென்றனைக் காத்திட முன்னிற்குமே.

திருவார் மயிலிற் கலாப மொளிர்தரச் சேவலெனும்
ஒருமா கொடியெழுந் தோமென வரப்பவொரு நொடியில்
வருவாய் துணைநீ யெனக்குநல் வாழ்வருள் மஞ்சவன
முருகா நினதரு ளென்றனைக் காத்திட முன்னிற்குமே.

ஒருநா ளெனினும் உளத்தினி லன்போ டுனைத்துதிப்போர்
பெருமாயை வன்பகை நோய்துன்பமாற்றிநற் பேறருள்வாய்
வருவாய்மை மேன்மை நல்வாழ்வருள் மஞ்சவனத்துறையும்
முருகா நினதரு ளென்றனைக் காத்திட முன்னிற்குமே.

தருவார் நிழலுறை யிந்திரன் வேண்டத் தாரகனை
வெருவாத சிங்கனைச் சூரனைச் செற்றிட்ட வேற்குமரா
மருவா மலம்பகை மாற்றிடும் மஞ்ச வனத்துறையும்
முருகா நினதரு ளென்றனைக் காத்திட முன்னிற்குமே.

திருவே ரகம்பரங் குன்றுசெந் தூருந் திருப்பழனி
முருகார் பழமுதிர் சோலை மலையும் முதியகுன்றும்
வருவாய தலங்கொக் குவிற்பதி மேவிய மஞ்சவன
முருகா நினதரு ளென்றனைக் காத்திட முன்னிற்குமே.

திருவார்தெய் வானை மணவாள கொக்குவிற் றிண்பதியோர்
ஒருதாய்வயிற்றிற் பிறந்தநல் லோரென ஒற்றுமையாய்
வருநாளு முன்றனைப் போற்றும் வரமருள் மஞ்சவன
முருகா நினதரு ளென்றனைக் காத்திட முன்னிற்குமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சரத்தினப்பா

திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் பாடியது

## நேரிசை வெண்பா

மஞ்ச வனப்பதியில் வாழும் வரமணியே!
தஞ்சமென நின்பால் சரணடைந்தேன் - செஞ்சொல்
குணபதியே! ஞானக் குருபரனே! செல்வக்
கணபதியே! காப்பாய் கனிந்து

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

அஞ்சலென அமரர்களை ஆண்ட தெய்வம்
அறிவினுக்கும் அறிவான அநந்த தெய்வம்
தஞ்சமென வந்தவர்நோய் தவிர்க்குந் தெய்வம்
தணியாத வினைதணிக்குஞ் சாந்த தெய்வம்
சஞ்சலங்கள் பலகோடி சாடுந் தெய்வம்
சண்முகமாய் உண்முகத்தில் சாருந் தெய்வம்
மஞ்சவனப் பதியமர்ந்த தெய்வந் தன்னை
மறவாதார் மற்றீண்டு பிறவா தாரே.

கஞ்சனைமுன் சிறைசெய்த கருணைத் தெய்வம்
கற்பூர விளக்கினருட் காட்சித் தெய்வம்
அஞ்சனைசேய் அஞ்சலிசெய் அருமைத் தெய்வம்
ஆறுமுகங் கொண்டென்னை ஆண்டதெய்வம்
மஞ்சனைய மாயவனார் வணங்குந் தெய்வம்
மயிலேறி வந்தருளும் மகிமைத் தெய்வம்
மஞ்சவனப் பதியமர்ந்த தெய்வந் தன்னை
வணங்குவார் தமையமரர் வணங்குவாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சணியுங் கண்டனருள் ஞானத் தெய்வம்
நால்வேதம் ஆகமங்கள் நாடுந் தெய்வம்
சஞ்சிதமா வினையனைத்துந் தகர்க்குந் தெய்வம்
சந்ததமும் வந்தவரைத் தாங்குந் தெய்வம்
பஞ்சமலப் பலரோகம் பாற்றுந் தெய்வம்
பன்னிருகண் மலர்ந்தெங்கும் பரந்த தெய்வம்
மஞ்சவனப் பதியமர்ந்த தெய்வந் தன்னை
வலஞ்செய்வார் உலகிற்கு நலஞ்செய் வாரே.

வஞ்சனைபொய் களைந்தவருள் வாழும் தெய்வம்
மலைதொளைத்த வடிவேலை வனைந்த தெய்வம்
செஞ்சரணஞ் சேர்ந்தாரைச் சேருந் தெய்வம்
சேரார்பால் சேராத செந்தில் தெய்வம்
குஞ்சரமா முகற்கிளைய குமார தெய்வம்
குரைகடலில் சூர்தடிந்த குழந்தைத் தெய்வம்
மஞ்சவனப் பதியமர்ந்த தெய்வந் தன்னை
மனங்கொண்டார் திருவருளாந் தனங்கொண்டாரே

பஞ்சவனார் பணிசெய்து பணியுந் தெய்வம்
பற்றிநின்றார் பற்றறுக்கும் பற்றில் தெய்வம்
வெண்சமணர் களைகளைந்த விசாக தெய்வம்
வேலேந்தும் விமலனென விளங்குந் தெய்வம்
அஞ்சுகனா தியர்பரவ ஆடுந் தெய்வம்
அகத்தியனுக் கருளிளமை யாளுந் தெய்வம்
மஞ்சவனப் பதியமர்ந்த தெய்வம் போற்றி
வாழ்வாரே பல்லாண்டு வாழ்குவாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி

# ஸ்ரீ முருகன் பதிகம்

## காப்பு

### நேரிசை வெண்பா

திருவளரும் கொக்குவிலூர் செவ்வேள்மே லன்பால்
வருபதிகம் பாடியுமே வாழ்த்த - ஒருமருப்புத்
தாங்கிய வென்தேவே தந்திமுகா நீதுணையாய்
ஈங்கிதற்குக் காப்பாய் இரு.

## கந்தன் துதி

### நேரிசை வெண்பா

மங்கலமார் கொக்குவிலூர் மஞ்ச வனப்பதியிற்
செங்கைவே லேந்தும் திருமுருகா - இங்கினிது
செந்தமிழிற் பாவியற்றத் தேவையென் நாவிருந்து
தந்தருள்வீர் முக்கலையுந் தான்.

### ஆசிரிய விருத்தம்

திருவந்த தண்ணளிக் குவளையொடு பதுமமும்
திகழவளர் மலர்களீய
சேரவளர் அன்னமுள சரவணப் பொய்கையில்
சிவனுதற் கண்ணிருந்து
உருவந்த பொறியாறும் குழவிவடிவந் தாங்கி
உற்பவித் திட்டவழகா
உளமகிழக் கார்த்திகைப் பெண்கள் தனமுண்டிட்ட
உயர்ந்தோர் கந்தமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமிந்தக் கருணைதரு மறுமுகங் கொண்டவா
வள்ளிதெய் வானைகணவா
மனமகிழ யுமைமடியில் விளையாடு மறுமுகா
மயிலேறி ஆடும்முருகா
குருதந்தைக் கென்னவே உபதேசஞ் செய்தவா
கொக்குவில் மேற்குவாழும்
குமரவடி வுளமஞ்ச வனப்பதியின் முருகனே
குருபரா அருளுவாயே. (1)

வந்தெனைக் கந்தருள்க வள்ளிதெய் வானையொடு
வடிவே லெடுத்தவழகா
வான்முகிற் கார்கண்டு ஆடிவரு கலாபத்து
வந்தமர்ந் தெந்தைமுருகா
சிந்தையமர் கருணைதர வந்திடுக குமரனே
தேவரிடர் நீத்தசெல்வா
செருக்குற்ற அசுரகிளை யளித்திட்ட செல்வமே
சீர்த்திதர அருகுவாவா
பந்தமுள மூவாசைப் பட்டுதுயர் கடல்மூழ்கிப்
பாவியான் செய்வதறியேன்
பலப்படவு மெண்ணிமன மிவ்வேளை வாடியே
படுதுயர்ப் படவும்முறையோ
கொந்தலரும் மாலையொடு கோழியங் கொடிதாங்கிக்
கொக்குவில் மேற்குவாழும்
குமரவடி வுளமஞ்ச வனப்பதியின் முருகனே
குருபரா அருளுவாயே. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமுமுனை அன்புகொண் டுளமதனிற் போற்றியே
சேவிக்க அருகமுருகா
திருதந்து கலைசேர்த்து வாழவருள் செய்தினிது
சித்திபெற அருளுமுருகா
மனமுவந் தீரெட்டுப் பேறுதனைத் தந்திடுக
மானிதத் தினிதுமுருகா
மங்காத வாழ்வுதர விங்காசை கொண்டிடுக
மாயவன் மருகமுருகா
தனமருளி யருளுதவு பணியரன் பணியாகத்
தரணிதனில் உதவுமுருகா
தந்திடுக ஈற்றிலுன் பாதார விந்தமது
தானடைந் திருக்கமுருகா
குனட்டைமிகு சிகியூர்தி கொண்டவடி வேலனே
கொக்குவில் மேற்குவாழும்
குமரவடி வுளமஞ்ச வனப்பதியின் முருகனே
குருபரா அருளுவாயே. (3)

வையகமெல் லாமுனது புகழ்பாடி யாடவே
வந்திடுக வடிவேலனே
வண்ணவிழி ஈராறு கொண்டமுக மாறுகொள்
வரதனே வெற்றிவேலா
ஐயவுன் முச்சத்தி யாலுலகம் வாழுமே
அடியனைக் காக்கலாதோ
அப்பனே முருகாவென் றன்புளங் கொண்டேத்த
அருளீய வேண்டுமையா
உய்யவழி தந்நருளுஞ் சேவலங் கொடியோனே
உலகதனில் உன்னையன்றி
உடன்வந்து துயர்களைவ ரையமுரு கையனே
ஊரிலா ருண்டுதுணையே
கொய்யவரு மருப்பவிழுங் கடப்பமலர் மார்பனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் மேற்குவாழும்
குமரவடி வுளமஞ்ச வனப்பதியின் முருகனே
குருபரா அருளுவாயே. (4)

மிக்கவென் துயர்களைய வள்ளிதெய் வானையொடு
மேன்மைதரு மயிலிலேறி
மிகுவிரைவி லென்முன்னே வந்திடுக வேலனே
மிதமுவந் தருளுபரனே
தக்கதென் செய்வதறி யாதுநான் வாடுவது
தானுமக் கழகுதானோ
சரவண பவாவென்ன வந்தருளு சடாட்சரம்
தலையாய நாமமென்று
இக்கணம் கொண்டுளத் துனைப்பாடிப் போற்றவே
யேற்றவர மீயவருவாய்
இன்பமுறு பேரின்ப வாழ்வுதவுவுங் குமரனே
ஏறுமயில் வாகனாவேல்
குக்குடக் கொடிகரம் கொண்டவுய ரழகனே
கொக்குவில் மேற்குவாழும்
குமரவடி வுளமஞ்ச வனப்பதியின் முருகனே
குருபரா அருளுவாயே. (5)

நம்பிவரு மடியாரிடர் களையுமுரு கையனே
நற்றவத் தோர்களேத்தும்
நாதாந்தம் முதலான வேதாந்த நாதனே
நங்கைகுற மாதுதுணைவா
அம்புவியில் அழகாக வாழவருள் செய்திடுக
அப்பனே ஆறுமுகவா
ஆனந்த மானபர மானந்த மானவா
அடியேனை ஆழவருவாய்
உம்பருல கம்புகழும் ஐயமயில் வாகனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனே வெற்றிவேலா
உன்னையல் லாலெனக் காருதவி யாகுவார்
உடனிருந் தாளுவாயே
கொம்பருள மலர்வனச் சோலையுள தளிகண்டு
கொக்குவில் மேற்குவாழும்
குமரவடி வுளமஞ்ச வனப்பதியின் முருகனே
குருபரா அருளுவாயே. (6)

எந்தனுக் குற்றுயர நற்பேறு தந்தினிது
ஏற்றமிக வாழவருள்செய்
ஏழையென் குறைகேட்டு நிறைவாக வேவாழ
எந்தையே கருணைகாட்டு
உன்றனின் பெருமைபுகழ் உலகறிவர் உள்ளன்பில்
ஒருதரும் எண்ணிமுருகா
ஓதினால் போதுமென் றுரைத்திடுவ ராய்ந்தவர்கள்
உண்மையாய் வந்துகாத்தாள்
கன்றிழந் திட்டவொரு கறைவையென நிற்கிறேன்
கருணைதந் தருளவருவாய்
கலியுகங் கண்டுபுகழ் கொண்டவுயர் குமரனே
காசினியி லாளல்கடனே
குன்றிலுய ரேழுமலை தங்கியருள் கூட்டவே
கொக்குவில் மேற்குவாழும்
குமரவடி வுளமஞ்ச வனப்பதியின் முருகனே
குருபரா அருளுவாயே. (7)

ஏற்றினிது காத்திடக் குமரவடி வேல்முருக
இதுகாலை யிங்குவாவா
இம்பரில் செய்வதென் னறியாது நிற்குமெனை
ஏந்தலே காக்கவாவா
தோற்றுமிவ் வுடல்கொண்டு நின்பணிகள் செய்தோங்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோத்திரம் செய்யவாவா
துணையென்று நின்னருட் பெயர்கொண்டு போற்றவே
தோகைமயில் மீதுவாவா
காற்றையுட் கொள்ளரவு மணிகொண்ட நாதனருள்
கந்தனே முன்புவாவா
காத்திடக் கருணைமழை பொழிகின்ற தெய்வமே
கடவுளே யாளவாவா
கூற்றுவன் தனையுதைத் திட்டவன் மைந்தனே
கொக்குவில் மேற்குவாழும்
குமரவடி வுளமஞ்ச வனப்பதியின் முருகனே
குருபரா அருளுவாயே. (8)

புவிவாழ்க்கை நிலையல்ல யென்றுணர்ந்திட்டுள்ளேன்
புனிதனே அப்புதாதா
போற்றிநின் பாதார விந்தமது பணியவே
புன்முறுவல் ஈந்துதாதா
கவியதனி லுனைப்பாடித் துயர்களைய நாதனே
கருணைதனை வந்துதாதா
கற்பனைக் கெட்டாத நின்னருவ வுருகாணக்
கந்தனே இன்புதாதா
தவிசுமணிப் பீடமுளதா மஞ்ஞையிவர் வேலனே
தான்வந்து பேறுதாதா
தரணிமிசை யருளுதவு கண்முகத் தெய்வமே
தமியேனுக் கேற்றதாதா
குவிபுகழ வருளுதவு கவிபுகழு மையனே
கொக்குவில் மேற்குவாழும்
குமரவடி வுளமஞ்ச வனப்பதியின் முருகனே
குருபரா அருளுவாயே. (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றமிழில் வைதாரை யும்வாழ வழிசெய்யும்
நாதனே போற்றிபோற்றி
நம்பரம னம்பிகைமுன் தும்பிமுகன் தம்பியென்
நாயகா போற்றிபோற்றி
பற்றுதவு நின்திருப் பாதகழ லிணைகாட்டு பாலனே
போற்றி போற்றி
பக்கமுள வள்ளிதெய் வதயானை வேல்மயில்
பண்டிதா போற்றிபோற்றி
மற்றெனது துயர்களைய அருளுதவ வருகுமொரு
மைந்தனே போற்றிபோற்றி
மணியணியும் பணியணைத் துயில்கொழும் மாயவன்
மருகனே போற்றிபோற்றி
கொற்றவனென் றுற்றன்பு பெற்றிடப் பேறுதர
கொக்குவில் மேற்குவாழும்
குமரவடி வுளமஞ்ச வனப்பதியின் முருகனே
குருபரா அருளுவாயே. (10)

கவிமணி வே. செல்வநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்

*காப்பு*

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள்
கந்தர் சஷ்டி கவசந்தனை

## குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

*நிலமண்டல ஆசிரியப்பா*

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிங்கிணியாட
மைய நடனஞ் செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர-ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சவ்வும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சவ்வும் கிளரொளியையும்
நிலைபெற் றென் முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலாலீலா லீலா விநோதனென்
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர் வேலிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய் தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள்இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனையடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட,
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கைகால் முறியக்
கட்டுக் கட்டுக் கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே ! சையொளி பவனே !
திரிபுர பவனே ! திகழொளி பவனே !
பரிபுர பவனே ! பவமொழி பவனே !
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய் !
கந்தா குகனே கதிர்வேலவனே !
கார்த்திகை மைந்தா கடம்பா ! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா !
தணிகா சலனே சங்கரன் புதல்வா !
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா !
பழநிப் பதிவாழ் பால குமாரா !
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா !
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா !
சமரா புரிவாழ் சண்முகத் தரசே !
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக,
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசமுடன் யான் நெற்றி யிலணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க !
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க !
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க !
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க !
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க,
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவ நீகுரு பொறுப்பதுன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாக
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி ! கந்தா போற்றி !
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணஞ் சரணஞ் சணமுகா சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி. வள்ளியம்மை அருள்பிரகாசம் அவர்களின்
# வாழ்க்கை வரலாறு சுருக்கம்

இயற்கை எழில் மிகுந்து, பிரசித்தி பெற்ற, சிவாலயங்களும், முருகன் ஆலயங்களும், விநாயகர் ஆலயங்களும் அமைந்து, பல்கலைக்கழகம், கல்லூரிகள், வித்தியாசாலைகள் யாவற்றையும் உள்ளடக்கி, பல கல்விமான்களையும் பெற்றெடுத்த யாழ்ப்பாண நன்நகரிற்கு அருகே, மா, பலா, வாழை, கரும்பு கமுகு இத்தனையும் சோலையாக அமைந்த கொக்குவில் மேற்கிலே, ச. வே. சண்முகம்பிள்ளை இராசம்மா தம்பதியினர் இல்லறம் என்னும் நல்லறத்தில் வாழும் பொழுது, தமது இல்லத்திற்கு முன்னதாக வைரவர் சுவாமிக்கு ஆலயம் அமைத்து, மகா கும்பாபிஷேகம் செய்வித்து, நித்திய பூசைகள் செய்து, வணங்கி வரும் பொழுது, 1933ம் ஆண்டு ஆனிமாதம் மஞ்சவனப்பதி முருகப் பெருமானிற்கு மடப்பள்ளிக்கிணறும், சந்தான கோபாலர் கோவிலும், மயூரமும் புதிதாகச் செய்து, வாய்க்கால் தரவை பிரம்ம ஸ்ரீ அப்பாத்துரைக் குருக்களை அழைத்து வந்து, சகல மூர்த்திகளுக்கும் மருந்து சாத்தி, மகா கும்பாபிஷேகமும் தங்கள் செலவிலேயே சிறப்புறச் செய்தனர்.

மஞ்சவனப்பதி முருகன் மேல் மிகுந்த பற்றுக்கொண்ட இவருடைய தாயும், தந்தையும் முருகப்பெருமானுக்கு ஒரு சித்திரத்தேர் செய்து, அதில் முருகன், வள்ளி, தெய்வயானை சமேதரராக முருகப்பெருமான் திரு வீதி உலா வரவேண்டும் என்ற பேரவாவோடு, இந்தியாவில் இருந்து திருவிடைமருதூர் திரு. சுப்பிரமணிய ஸ்தபதியாரை வரவழைத்து, உடுப்பிட்டி திரு. செ. கணபதிப்பிள்ளையோடு இன்னும் பலரைச் சேர்த்து மஞ்சவனப்பதி முருகப்பெருமானுக்கு அழகிய வேலைப் பாடுகளுடன் கூடிய சித்திரத்தேரை மற்றவர்களின் பண உதவி பெறாமல் தாங்களே செய்வித்து வரும் பொழுது 17-05-1939இல் இவர்கள் செய்து வந்து தவத்தின் பயனாக பெண் குழந்தை பிறந்தது. முருகன் மேல் அளவு கடந்த பற்றுள்ள இவர்கள் இக் குழந்தைக்கு வள்ளியம்மை என நாமகரணம் சூட்டி மகிழ்ந்தார்கள். ஆயினும் மதுரை மீனாட்சி என்ற செல்லப் பெயரினாலேயே எல்லோராலும் அழைக்கப்பெற்று வந்தார்.

அதே ஆண்டு வைகாசித்திங்கள் ஆனைப்பந்தி திரு. விசுவலிங்கம் ஆசாரியார் மூலம் திருத்தேருக்கு யந்திரம் வைத்து, முருகனை ஆவாகனம் பண்ணி முறையே வெள்ளோட்ட விழாவையும் நடத்தினர். அத்தினத்திலேயே சந்நிதானத்தில் குழந்தை வள்ளியம்மையையும் கொண்டுவந்து முருகனுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் செய்து மகிழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை வளர்ந்து வருங்கால்............................., ஆரம்பக்கல்வியை உள்ளூர் பாடசாலையில் ஆரம்பித்து வைத்தார்கள். பின்னர் 1947ம் ஆண்டு மார்கழி மாதம் தீர்த்தயாத்திரை செய்வதற்காக தாய் தந்தையரோடு இந்தியா சென்று, சேது, ராமேஸ்வரம், மதுரை, முருகனின் ஆறுபடை வீடுகள், திருப்பதி, திருக்காளத்தி, முதலிய தலங்களையும் தரிசித்து, காசிக்குச் சென்று கங்கையில் தீர்த்தமாடி இறைவனுடைய திருவருளையும் பெற்றுக் கொண்டு மீண்டும் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். இவவினுடைய கல்வியில் முன்னேற்றம் கருதி, பெற்றோர்கள் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்க வைத்தார்கள். அப் பாடசாலையில் கற்றதன் பயனாக பாடசாலை பாடங்களோடு சங்கீதத்தையும் கற்றதனால் சங்கீத அறிவும் கிடைக்கப் பெற்றார்.

அத்தோடு இவருடைய தந்தையார், ச. வே. சண்முகம்பிள்ளை அவர்களுக்கு நீர்கொழும்பிலே தென்னந்தோட்டங்கள், வீடுகள், வர்த்தக ஸ்தாபனங்கள் என்று இருந்ததனால், அங்கே செல்லும் போதெல்லாம், பாடசாலை விடுமுறை காலங்களிலும், மற்றும் தேவை ஏற்படுகின்ற காலங்களிலும் தன்னுடைய காரிலே மகளை அழைத்துச் சென்று பல்லின மக்களோடும் பழகுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தார். நீர்கொழும்பிலே தங்கியிருந்த காலங்களில் எல்லாம் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் கற்கக்கூடிய வாய்ப்பைப்பெற்று, அதனால் மூன்று மொழிகளிலும் சரளமாகப் பேசக்கூடிய வாய்ப்பினையும் பெற்றார்.

கல்லூரிப்படிப்பைவிடப் பிரத்தியேகமாக அவ்வூர் ஞானபண்டித வித்தியால முகாமையாளரும், சிறந்த கல்விமானும் ஆகிய புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களிடம் சமய அறிவையும் புலவரின் மருமகனார் வைத்தியர் பொன்னம்பலம் அவர்களிடம் வைத்தியக்கல்வியையொட்டிய அனுபவ அறிவையும் பெற்றுக் கொண்டார்.

வள்ளியம்மை திருமணப்பருவம் எய்தியதும் வள்ளியம்மைக்கு ஏற்ற மணாளனாக, ஆனைக்கோட்டை ஓய்வு பெற்ற ஓவசியர் இராஜரட்ணம் தங்கம்மா தம்பதிகளின் புதல்வன் டாக்டர் அருள்பிரகாசம் அவர்களை 01–12–1954 இல் திருமணப்பதிவு செய்து 09–04–1955 இல் மிகவும் சிறப்பான முறையில் திருமணம் செய்து வைத்தார்கள்.

இவர்களின் இனிய இல்லற வாழ்க்கையின் பயனாக பிரபாகரன், முரளீதரன், கிருபாசக்தி, தயாபரன், ரவிகரன், ஜெயேந்திரன் ஆகியோரைப் பெற்று, இல்லறவாழ்க்கை இனிதே நடைபெற்று வரவும், இவர்களுடைய பிள்ளைகளை ஒழுங்காக கல்வி கற்பித்து வருங்காலத்தில்......, வள்ளியம்மையின் அன்புத் தாய் இராசம்மா அவர்கள் 07–03–1968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாழக்கிழமை, ரோகினி நட்சத்திரமும், பூர்வபக்க அட்டமி திதியும் கூடிய தினத்தில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஞாபகார்த்தமாக மஞ்சவனப்பதி முருகன் ஆலய திருவீதியின் நிருதிமூலையின்கண் அருணகிரியார் மடம் என்னும் பெயரில் உள்ள கட்டிடத்தில் அவரின் திருவுருவப் படத்தை செனற்ரர் த. நீதிராஜா (J.P.) அவர்கள் 03-04-1968 புதன்கிழமை காலை கும்பாபிஷேக தினத்தன்று திரை நீக்கம் செய்து வைத்தார்

இதன் பின்னர் வள்ளியம்மை அவர்களுக்கு கடைக்குட்டி மகனாக சண்முகராஜ் பிறந்தார்.

இக்காலகட்டத்தில் இறைபக்திமிக்க இவருடைய தந்தையாரான ச.வே. சண்முகம் பிள்ளை அவர்கள் தன்னைத்தானே அறிகின்ற ஆன்மீக அறிவு கொண்டவர். தான் இப் பூவுலக வாழ்க்கையை விட்டு நீங்கப்போவதை முன்கூட்டியே அறிந்து தனது மகள் வள்ளியம்மைக்கு தான் இல்லாக்காலத்தில் நடந்து கொள்ள வேண்டிய அறிவுரைகளை கூறியும் எழுதிக் கொடுக்கவேண்டிய சொத்துக்கள் அனைத்தையும் எழுதிக்கொடுத்தும், இப்பூவுலக வாழ்க்கையை விட்டு நீங்க ஆயத்தமாகிய பொழுது தனது ஆன்மா உடலை விட்டுப் பிரியும் நாளை முன் கூட்டியே மகளுக்கு, மருமகனிற்கு, பேரப்பிள்ளைகளுக்கு அறியவைத்து, 20-08-1970ம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்து சிவபதம் எய்தினார்.

இதன் பின்னர் தந்தையாரின் பொறுப்புக்களை ஏற்று, கணவரும் பிள்ளைகளுமாகச் சேர்ந்து, ஆலய திருவிழா உபயங்களை செய்து வந்தனர்.

தனதுபிள்ளைகளை ஒழுங்காக கல்வியை கற்க வைத்து, அவர்களை கல்வி மான்களாகவும், ஒழுக்க சீலர்களாகவும், உயர்த்துவதற்கு பெரிதும் பாடுபட்டார்.

மஞ்சவனப்பதி முருகன் ஆலயம், நல்லூர் கந்தசுவாமி கோயில், செல்வச்சந்நிதி முருகன் கோயில், கதிர்காமக்கந்தன், வீரமா பிடாரி அம்மன், வராஹி அம்மன், உத்துங்க விநாயகப் பெருமான், இத்தனை ஆலயங்களிலும் நடைபெறுகின்ற உபயங்கள், திருவிழாக்கள், மகோற்சவங்கள் இவற்றில் நேரடியாக சென்று வணங்குவதில் பேறு பெற்றவர். கந்தசஷ்டி விரதத்திற்கு 6 நாட்களும் உபவாசம் இருப்பதும், விரதங்கள் பிடிப்பதும் அவருடைய முக்கிய பொறுப்பாக இருந்தது. மேற்கூறப்பட்ட ஆலயங்கள் அனைத்திற்கும் தங்கள் குடும்பபங்களிப்பாக திருப்பணிகள் முதலியவற்றிற்கும் உதவி வந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கால கட்டத்தில் அமெரிக்காவில் பொறியியலாளராக கடமையாற்றும் பிரபாகரனுக்கு 10–09–1986ல் திரு சோமநாதர் ஓலிவ் தம்பதியர்களின் மகள் தயாநிதியை திருமணம் செய்து வைத்து மகிழ்வுகண்டார்கள். இவர்களின் இல்லறவாழ்க்கையின் பயனாக, எல்வின் கிருஸ்ணா, மிசேல் அனுசா என்ற பிள்ளைகளை பெற்றனர்.

இதன் பின்பு 10–04–1989இல் மகள் கிருபாசக்திக்கு மாவிட்டபுரம் தம்பிஐயா சேதுப்பிள்ளை தம்பதியர்களின் மகன் டாக்டர் சுவர்க்கலோகநாதன் அவர்களை, தமது இல்லத்திலே மிகவும் சிறப்பான முறையில் திருமணம் செய்து வைத்தார்கள். இவர்களின் இனிய இல்லற வாழ்க்கையின் பயனாக பிரகாஸ், சாருகாஸ், திவ்வியகாஸ், மிதுனகாஸ் என்ற பிள்ளைகளை பெற்றெடுத்தனர்.

இப்படியாக பேரப்பிள்ளைகளோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து வரும் காலத்தில், 02–02–1993ல் அவுஸ்ரேலியா மெல்போன் நகரில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மகன் ரவிகரன் நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை அகாலமரணம் எய்தினார் என்ற அதிர்ச்சி தரும் செய்தியைக் கேட்டு மனம் கலங்கிப்போனார்கள். அன்னாரது ஆத்மசாந்தி கிரியைகள் யாவும் செய்து, சிறிது காலத்தின் பின்னர் வள்ளியம்மை அவர்கள் கொழும்பு வந்து சேர்ந்து, மகன் ஜெயேந்திரனோடும், மகள் கிருபாசக்தியோடும், இரு வீடுகளிலுமேயே மாறி மாறி வாழ்ந்து வருங்கால் நன்மக்கட் பேறும், குன்றாத பொருட் செல்வமும் சேர இன்புற்று வாழும் நாளில், தம் இல்லத்துக்குவரும் உற்றார், உறவினர், நண்பர்கள், இன்னும் வசதியற்றவர்கள் எல்லோருக்கும் முக மலர்ச்சியோடு விருந்தளித்து மகிழ்ந்ததத்தோடமையாது. மேற்கூறியவர்களின் இல்லங்களுக்குத் தாமே நேரிற் சென்று அவரவர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்தும் இன்னுரை வழங்கியும் இன்புற்றார்.

94ஆம் ஆண்டு புரட்டாதியில் பிள்ளைகளைக் காணவிரும்பி அமெரிக்கா சென்று, பிரபாகரன் குடும்பத்தினரையும் தயாபரனையும் சந்தித்து அவர்களுடன் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார். பின்னர் கனடா சென்று 95 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அங்கு தொழில் நுட்பவியலாளர் ஆகக் கடமையாற்றும் சண்முகராஜிற்கு மாவிட்டபுரம் முருகையா – மகேந்திரராணி தம்பதிகளின் புத்திரி தனரூபராணியைத் திருமணம் செய்து பெரிதும் இன்புற்றிருந்தார். சில மாதங்களின் பின்னர் திரும்பவும் கொழும்பு வந்து பிள்ளைகளுடன் சேர்ந்து கொண்டார்.

யாழ்ப்பாண மக்கள் அனைவரும் புலம்பெயர்ந்து, தென்மராட்சி, வடமராட்சி, வன்னி, கொழும்பு போன்ற இடங்களுக்கு சென்று கொண்டிருந்த வேளை, வள்ளியம்மையின் கணவர் அருள்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கொழும்பு வந்து மனைவியுடன் 96ம் ஆண்டு முற்பகுதியில் இணைந்து கொண்டார்.

கொஞ்சக்காலமாக கொழும்பில் வாழ்ந்து விட்டு, கணவருடன் அமெரிக்காவில் உள்ள தயாபரனிற்கு விவாகம் செய்து வைப்பதற்காக அமெரிக்கா சென்று, அமெரிக்காவில் இருக்கும் மூத்தமகன், மருமகள், பேரப்பிள்ளைகள் ஆகியோரையும் பார்த்து மகிழ்ந்து, பின்னர் அமெரிக்காவில் பொறியியலாளராக கடமையாற்றும் தயாபரனிற்கு

15-03-1997ல் துரைராசலிங்கம் சத்தியதேவி தம்பதியினர்களின் மகள் அமுதாவை திருமணம் செய்து வைத்தனர்.

வெளிநாட்டிலே பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்த மகிழ்வோடும், மற்றும் வெளிநாடுகளில் இருக்கின்ற உறவினர்களை சந்தித்த மனத்திருப்தியுடனும் கொழும்பு திரும்பி வந்து, மகன் ஜெயேந்திரனோடும், மகள் கிருபாசத்தியுடனும் மாறி மாறி வாழ்ந்து வருங்கால்.....

ரெக்னோலங்கா பணிப்பாளர், பீப்பிள்ஸ் பார்க் கொழும்பு 11, ஜெயேந்திரன் அவர்களுக்கு 04-12-1997இல் கொக்குவில் கிழக்கு, சண்முகரத்தினம் தவமணிதேவியரின் மகள் வாசுகியை திருமணம் செய்து வைத்து மகிழ்வுற்றனர்.

அதன் பின்பு ஜெயேந்திரன், அவரது மனைவி வாசுகி ஆகியோரோடு மகிழ்ச்சியாக வாழ்க்கையை கழித்து வந்தார்.

இப் பூவுலக வாழ்க்கையில் நீண்டகாலம் நீடிக்க முடியாது என தன்னைத் தானே உணர்ந்து கொண்ட அன்னார் சில தினங்களுக்கு முன் வத்தளையில் உள்ள தனது மகளின் வீடு சென்று அங்கே எல்லோரோடும் சேர்ந்து உணவருந்தி மழலைகளுடன் (பேரப்பிள்ளைகள்) மழலை பேசி இருந்த பின்னர், ஏதோ உடலில் ஒரு வித்தியாசம் ஏற்பட்டதை உணர்ந்து கொண்டு, தன்னை வைத்தியசாலைக்கு அழைத்து செல்லுமாறு கூறியதன் பிரகாரம் அதிவிசேட வைத்திய வசதிகளைக் கொண்ட நவலோகா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் பயனளிக்காது போக, அன்னாரது உறவினர்கள் கணவன், மருமகன், பிள்ளைகள் அனைவரும் சூழ்ந்து நிற்க, அன்று, பங்குனித் திங்கள் 25ம் நாள் புதன்கிழமை, பூர்வபட்ச, பூரநட்சத்திரமும், துவாதசி திதியும் கூடிய தினத்தில், அன்னாரது ஆன்மா பூத வுடலிருந்து பிரிந்து சென்று, இறைவனடி சேர்ந்தது.

*அன்னாரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போமாக!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IN LOVING MEMORY OF

Mrs. Valliammai Arulpiragasam also known as Mathurai Meenachi Born on 17.05.1939 under star Parani in mesha Rasi with Numerological Number 8 for date and Index No. of date of Birth, during the saturn 7 1/2 period.

She was the only child of late Mr. Shanmugam Velupillai Shanmugampillai of 'Kugasthan' Kokuvil - West, Kokuvil, Jaffna - Northern Province, Sri Lanka (Ceylon) who decended from the famous Vidanai (Grama-sevaka) family and had several business Establishments in Colombo and Negombo and also had coconut plantations and house in Demanhandiya-Negombo and to Rasamma daughter of Chelliah of Kokuvil. This couple did not have children for many years. They visited Hindu shrines severel times in Ceylon and India. Made lot of renovations to the Manchavanapathy temple in Kokuvil - West, put up a Santhaana gopala (Lord Krishna) Shrine in this temple, continued annual poojas requesting for progeny. After few years Mrs. Rasamma conceived a child. The couple made one of the largest decorative temple Chariot with Historical carvings for Lord Murugan of this temple at their own expence by getting sculpters from India. During this period Valliammai was born. For the first running of the Chariot (Velloddam) the child was brought for Lord Murugan's blessings. Thereafter they bought Lands for the path to run the chariot and built a building to house the chariot. Opened a trust in the name of Valliammai for the maintanance festival. Chariot festival had been conducted for the last several years upto 1997.

Valliammai started her education in Ramanathan College at Maradanamadam, Jaffna, where she learnt Music & Dance as well. She had religous studies too. She learnt Periyapuranam, Kandapuranam, Mahabharatham & Geethai from Kumaraswamy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pulavar and Mr. C. Ponnampalam Ayurvedic physician both of Kokuvil. She had fair knowledge of astrology and Ayurvedam too.

During Holidays she joins her father to the Coconut Estates in Negombo. There she learnt to speak Sinhala fluently. She did accompany her father in several visits to shrines in India including Kasi, Rameswaram and dips in ganges there. Fasted and visited Kataragama almost every year.

Her registration of marriage took place on the 1st of December 1954 to Dr. R. Arulpiragasam M.B.B.S. (Cey) Son of Chellappah Rajaratnam (Retired P.W.D overseer) and Thangammah of 'Sivasthan' Anaicoddai and had their Hindu ritual Ceremony on the 9th of April 1955. Thereafter accompanied her husband to his work places in differentt parts of the Island. She had seven children, (six boys and a girl). Most of her time was spent in 'Kugasthan' Kokuvil-West Kokuvil in the interest of children's education. She assisted them in there basic education and encouraged them in Religious education and sports as well.

All children had their education in Kokuvil Hindu College. Pirabaharan born in 1958 proceeded to United Kingdom for higher education did B.Sc Chemical Engineering and returned to Sri Lanka. But due to Country's crisis left to United States of America got Employed and got married in 1986.

Muraleetharan born in 1959 after his college education Qualified as on Automobile Engineer . Kirupabakthy born in 1961 finished her education and got married to Dr. T. Swargaloganathan M.B.B.S. (Cey) in 1989 and is blessed with four sons. Thayaparan born in 1963 proceeded to USA for further education and qualified as Computer Engineer and did MBA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In 1965 Raviharan was born who had additional Education in St. Johns Academy and was previledged to join Australian University but his life ended following a swimming pool accident on the 2nd of February 1993. Born in 1967 is Jayenthiran who is having his own business, Technical Enterprises in Colombo at Peoples Park Complex, Colombo 11. The youngest and the Wittiest Shunmugaraj was born in 1969 migrated to Switzerland and from there to Canada where he received his Technical Qualifications and running his Video & Audio Services.

She was like a Lighted lamp to the relatives, friends and neighbours. gave comfort, advice when needed and comforted them in their sorows. Any one in need was entertained & helped. During her period she lost her Father-in-law in 1959, Mother-in-law in 1967, Mother in 1968 and father in 1970, In spite of all there she look care of children observed meditation, fasting & Poojas for temples around house (Varahi Amman, Gnana Vairavar, Pidari Amman) Vinayagar, Manchavana pathy, Sellachenathi, Kataragama and also visited holy Shrines in India. During the parents sickness she looked often them and after their death she continued performing their annual religious rites until her death.

She became sickly in 1991. she came to Colombo for check-up and treatment. The first blow came in 1993 when her loving son Raviharan died in Australia. Her condition was bad. she was hospitalised treatment for in Jaffna Hospital. When fully recovered she came to Colombo. She was at Ragama with her daughter and family. In 1994 she joined her eldest son and family in USA and also with her son Thayaparan for one year. From here she visited her youngest son in Canada, got him married and returned to Sri Lanka to her daughter & family and son. During this period her husband

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

joined her from north. and stayed with her eldest son & family. Both left to USA in Dec 1996 Here she arranged a marriage for son Thayaparan and had the wedding in Canada. Met most of her relatives and friends in Canada returned to New jercy and was with the new couple till May & returned to Sri Lanka.

Her youngest son in Canada met with an accident and by god grace living still. She paid homage to holy Kataragama Shrine with relatives and made offerings. by carrying Lighted Camphor pot on head inside temple premises and offered meals to the devotees.
In 1997, followed was a Lorry Accident news of her daughter at Wattala. She is presently sound in health.

With all this she arrange marriage for her son Jayenthiran in Colombo which took place on 4th Dec 1997 followed by her daughters confirment in January 1998. which ended in operation.

In spite of consultation and treatment her health was deteriorating on one side and was hospitalised on 6th of April 1998 in Bed No. 8 Intensive care Unit at Nawaloka. She was called to rest in peace on the 8th of April. Lord Saturn entering the mid third phase of 7 1/2 year period.

She was one of the most courages, determined and sympathetic Lady. Left us, to join the hands of god with her Thali & Thilakam & Flowers which is considered to be a great blessing.

May her soul Rest in Peace.

**Dr. R. ARULPIRAGASAM**
Loving Husband

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மாவுக்கு ஓர் கடிதம்......

அன்புள்ள அம்மா,

நீ இறைபதம் அடைந்துவிட்டாய் என்ற செய்தியை அறிந்தேன். நான் நம்பவில்லை. ஏனென்றால் நீ எதையும் என்னிடமும் சொல்லியே செய்வாய் அதில் உனக்கு ஏதோ திருப்தி. நீ ஒரு முன்னோடி என நானறிவேன். அப்பாவும் இறுதிக்கடிதத்தில் அப்படி ஏதும் எழுதவில்லை. எனவே நான் நம்பவில்லை. இருந்தாலும் உண்மையாக இருந்துவிட்டால் என ஒரு மனப்பதற்றம். எனவேதான் கனமேறிய நெஞ்சுடன் இதை உனக்கு எழுதுகின்றேன். நீயும் நாங்களும் போட்ட வேடிக்கைகளில் சில, சாக்காலம் வரை பசுமை நிறைந்த இவை உனக்கும், எனக்கும், எமக்கும் மட்டும் புரிந்த ஒன்று!

### பிறந்த நாள்

*பிறந்தநாள், அண்ணனுக்கு பிறந்தநாள்*
*அன்றே எனக்கும் கொண்டாடு*
*அடம்பிடிப்பேன், வயது மூன்றிருக்கும்*
*சட்டை ஒன்றை போட்டுவிட்டு*
*கையில் ஒரு தேங்காயை தந்து*
*முற்றத்து வைரவரிற்கு அடித்துவிட்டு*
*வா என்று அண்ணனுடன் அனுப்பி*
*வைப்பாய். தேங்காய் பிளந்ததுமே*
*என் அடமும் தீர்ந்துவிடும்*
*உனக்கிந்த உளவியலை எவர் கற்று*
*தந்தாரோ! உன் சாமர்த்தியத்தைத் தான்*
*என்ன வென்பேன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருவம்

அம்மா உனக்கு ஞாபகம் உண்டோ
எமது கிணற்றடியில் மூன்று சிதம்பரத்தை
ஒன்றில் நீ கம்புமுறிப்பாய் என்னை அடிக்க
மற்றொன்றில் நான் முறிப்பேன்
உன்னை அடிக்க
ஏன் அடி விழப்போகிறது என
அறியாத அது ஒரு பருவம்
நீ முறித்த கம்பு சிதறும்வரை
அடிக்க, ஓடாது நின்று சுகமாக
அடிவாங்கியது இன்னுமொரு பருவம்
நீ சொல்லாலடிக்க எதிர்ச்சொல்
நான் அடித்துச் சென்றது
ஒரு பருவம். நீ செஞ்சொல்லால்
அடிக்க இனிமையுடன் காது கொடுத்து
நின்றது இன்னும் ஒரு பருவம்
உன்னிடம் இனி அடிபடவே கூடாது
என மாற்றம் காண விளைந்தது
ஒரு பருவம்
அந்தோ! நீ அன்பால் அடித்துவிட்டு
மறைந்து விட்டாய்.

## குற்றப்பத்திரிகை

அம்மா இன்று தம்பிப்பிள்ளை பள்ளிக்கூடத்தில்
ஒருவனுடன் சண்டையிட்டான். ம்..... ம்.....
தம்பி இன்று மதிய இடைவேளை மண்ணில்
புரண்டு வட்டம் விளையாடினான். ம்..... ம்.....
தம்பி இன்று வாத்தியாரிடம் அடி வாங்கினான். ம்..... ம்.....
தம்பி இன்று பள்ளிக்கூடத்தை சுற்றி உள்ள
நண்பர் வீடுகளெல்லாம் திரிந்தான். ம்..... ம்.....
இவை அண்ணனின் குற்றப்பத்திரிகை
அம்மா உன்மனதில் இந்த முறைப்பாடுகள்
விசாரணை இன்றியே தள்ளுபடி ஆகிவிடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லோர்க்கும் நல்லவரே

எம்குடும்பக்கதம்பத்தில் நீதான் ஜனாதிபதி
அப்பாவோ அரசாங்க அதிகாரி அரைவாசி
நாளும் எம் வீட்டிலிரார். எம்முடைய
அரசியலும் அவருக்கு வெகுதூரம்.
இருந்தாலும் இடையிடையே அவர்தான்
கல்வி அமைச்சர். அண்ணனோ நீதித்துறை
தம்பிநான் காவல்த்துறை ரவியோ சாது
இடையில் இருவர் கடையில் இருவர்
கடையவர் இருவருமே எல்லோரின்
எடுபிடிகள் குகஸ்தான் ராச்சியத்தில்
அவ்வப்போ சண்டை மூழும்
முறைப்பாடு வருமுன்பே காவலன் நான்
சென்றிடுவேன். தீர்வு கசப்பு எனில்
அண்ணனிடம் திரும்பும். வலிய பிணக்கு
எனில் உன்மன்றம் ஏறும். எல்லோரும்
ஒன்றாக சின்ன முண்டியில் கூட
நாலடியார், நன்நெறி, ஆத்திசூடி, திருக்குறள்
புராணம், இதிகாசம், பழமொழிகள்
இவற்றுடன் கரை கடந்த அனுபவங்கள்
உன் சட்டக்கோவை
தேவைக்கு ஏற்றாற்போல் எடுத்தொவ்வொன்றாய்
அடிப்பாய், நிலைமைக்கு ஏற்றாற் போல் கொஞ்சியும்
பார்ப்பாய், இல்லையெனில்
எழுந்து நின்று மிஞ்சிடுவாய், இடுப்பில் இருகை
மிடுக்குடனே பிணக்காளர் இருவருமே
கைகோர்த்து நின்றிடுவார், சாகாவரம்பெற்ற
நிலையான தீர்ப்பு அது
ஏதேதோ கதைமாறி மன்றின்பம் காணும்
இடையினிலே உறவினரும் கலந்தின்பம்
கொள்வார். உன்பேச்சொவ்வொன்றும்
நகைச்சுவையாய் வெடிக்கும். உணவு வேளை
வந்ததுமே ஒன்றாக கலைவோம்.
உனக்கும் நாம் எல்லோரும் நல்லவரே
எம் எல்லோர்க்கும் நீயும் நல்லவரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலை அறுத்துவிட்டாய்

*அம்மா நாளைக்கு விளையாட்டுப் போட்டி*
*நானும் ஓடுகிறேன் அண்ணனும் ஓடுகிறான்*
*தம்பியும் தங்கையும் கூடவே. எல்லோரும்*
*அணிநடைக்கு பயிற்சியும் எடுத்துவிட்டோம்*
*இந்தா பார் இடம் வலம். நீயும் வருவியா?*
*அன்றைக்கு எமக்கெல்லாம் உபசாரம் பிரமாதம்*
*நாம் முன்னே சென்றதுமே நீ காரில் தொடர்ந்திடுவாய்*
*விருந்தினராய், வந்தமர்ந்த உன்கண்கள் எம்மையெல்லாம்*
*தேடிவரும்*
*அணிநடையில் கண்டதுமே ஆனந்தம்*
*கொண்டிடுவாய், அடுத்து*
*ஆரம்பம், ஆயத்தம், டுமீல்*
*எம்கால்கள் மண்கிளற உன் இதயம்*
*கொப்பளிக்கும். நாம் முதலாய் நூலறுக்க*
*உன் பெருமூச்சு வெளியேறும்*
*எம்மிதயம் கொப்பளிக்க நாம் தொடர்ந்து*
*ஓடுகிறோம். நூலை இன்னும் காணவில்லை*
*எமக்கு முன்னாலே நீ நூலை அறுத்துவிட்டாய்.*

## எந்தம்மா வரப்போறா

*எம்மூர்த் தோட்டத்தில் புகையிலைகள் வெட்டியதும்*
*பாலர் நாம் பட்டம் விட தோட்டவெளி*
*போய்விடுவோம். பருவம் ஏறிவர*
*கட்டுப்பாடும்*
*இறுகியது*
*எம்வீட்டு கூரைமேல் தோழர்நாம் ஏறிடுவோம்*
*ஒருவன் ஒருமுனையில் பட்டம் பிடிக்க*
*நானோ மறுமுனையில் பட்டம் விட நூல் பிடிப்பேன்*
*மற்றவர் எல்லோரும் தம்கை கொட்டி நிற்பர்*
*பக்கத்துத் தென்னையிலே நூல்பட்டு பட்டமறும்*
*பிள்ளையை பறிகொடுத்த தாய்போல் நாமாவோம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவம் முடிய முன்பே பாதி ஓடு உடைந்துவிடும்
ஒவ்வொரு ஓடு உடையும் போதும் உன்திட்டும் கூடவரும்
உனக்கு தொப்புள் கொடி முச்சையிட்டு
நாமொவ்வோர் நூல்பிடித்தோம். காலனவன்
கைபட்டு எம்பட்டம் அறுந்ததம்மா. தாயை
பறிகொடுத்த பிள்ளைகள் நாமானோம்
பருவம் பாதியிலே உன்கூட்டை உடைத்து
விட்டோம். எம்மைத் திட்ட இனி
எந்தம்மா வரப்போறா ?

## புரிந்துகொண்டேன்

திணம் திணம் அறுசுவையாய் சமைத்
தெமக்கு படைத்திடுவாய், வேறெங்கோ
ஆழ்ந்தபுலன் சிலநாள் சுவை தவறவிட்டாய்
குழம்பு உறைக்குதம்மா என்று நான்
முறையிடுவேன். ஏனோ என் முறைப்பாட்டை
நீ கவனத்தில் கொள்ளவில்லை. அன்றொருநாள்
மதியம் சமைத்துவிட்டு சென்றுவிட்டாய்
அன்றும் உன் பீற்றுட்டில் காரம் கொட்டியது
கண்ணில் தண்ணீர் வர நாக்கையும் உறிஞ்சிக்
கொண்டு குசினிக்குள் நான் நுழைந்தேன்
கறிபாதியை மாத்தி விட்டு, மீதிக்கு நாலு
கறண்டி தூள் போட்டு கிளறிவிட்டேன்
உனக்கு வயிறு கிள்ளியதும் வீடுவந்து
தட்டைத் தூக்கி, சோறு கறியை நீ சுவைக்க
துவங்கிவிட்டாய். என்ன செய்கின்றாய்
என்று நான் மெல்ல நோட்டம் விட்டு
காத்திருந்தேன். உன்கைப் பாகமது உனக்
கறியா ஒன்றல்ல, எவனோ கள்ளன் குசினிக்குள்
புகுந்துவிட்டான், என்று நீ எண்ணி நேரில்
வந்தாய் என்னிடமே. உன் முகத்தின் கண்
இரண்டும் செந்தணலாய் காட்சிதர என்னடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தனி என்று ஒரு போடுபோட்டாய்
மாட்டிக் கொண்டேன், வேண்டுமென்று
செய்யவில்லை என்முறைப்பாடு உனக்கு
புரியவில்லை அதனாலே போட்டுட்டேன்
என்றுரைத்தேன். ஆர்ப்பாட்டம் பண்ணாமல்
என்னைப் புரிந்து கொண்டாய். நீ அம்மா
என்னை நான் புரிய என்னிடம் நான்
முறையிட்டும் நேற்றுவரை முறைப்பாடு
பெட்டியில் முடங்கியது, இன்று, நீ
பெட்டிக்குள் நுழைந்தாய் என்ற செய்தி
நான் அறிய, என்கண்கள் நீர்வடிக்க
என்னை நான் புரிந்து கொண்டேன்.

## தொலை நோக்கி

வயது பதினைந்திருக்கும் மணியோ ஐந்திருக்கும்
ஒழுங்கையில் நான் தோழருடன் கிரிக்கட்
ஆடிநின்றேன். மட்டையுடன் விக்கட்டின்
முன்னாலே நின்ற என்னை, இடுப்பினிலே
இருகைவைத்து உன்கண்கள் வட்டமிட,
ஏன் இந்த அம்மாகண் என்னை வட்டமிடுதோ,
என்று எனக்குள்ளே நான்கேட்டு முடியுமுன்பே,
நண்பனின் பந்தெறியில் விக்கட் பறந்துவிட,
கோட்டைவிட்டு வெளியேவந்த என்னை
நீ அழைத்து, உனக்கு ஒரு வாத்தியாரை
நான் ஒழுங்கு பண்ணிவிட்டேன், நாளையில்
இருந்து நீ அங்கு படிக்கப்போ. அம்மா
நான்போவேன் ஆனால் விளையாட்டையும்
தொடர்ந்தும் ஆடவிடு, என்று நான்
கேட்டு உன்சம்மதமும் பெற்றுவிட்டேன்.
அங்கும் வாத்தியாரும் என்னுடன் ஒத்துழைத்தார்.
பள்ளிப் பந்தடியில், கிரிக்கட்டில், விளையாட்டு
போட்டியிலும் என்பங்கும் இணைந்துகொள்ள,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்கள் ஓடிவந்து டிசம்பரை தொட்டுவிட,
பரீட்சைப்படி ஏறி பக்குவமாய் வெளிவந்தேன்.
வந்ததும், வராததுமே, களத்துமேடு சென்று களமாடி
வா என்று அடுத்து என்னை அனுப்பிவைத்தாய்.
களமாடி களைத்திருந்தேன். மணி மாலை
ஐந்திருக்கும். அங்கிருவர்வந்து உன்செய்தி
என்றுசொல்லி "பரீட்சையில் நீ பாசாம்" என்று
என்காதில் போட்டுவிட்டு சென்றனரே
வகை வகையாய் பலகாரம் எல்லோருடன்
பகிர்ந்து கொண்டாய்
முழுமுட்டாள் என்றுபட்டம் நான்
வாங்கு முன்னரே, இடையில் நீ புகுந்து
அப்பட்டத்தை தட்டிவிட்டாய். நீ
அன்று தந்த ஊக்கத்தில் வேர்விட்ட
தன்நம்பிக்கை, மலைபுரட்டும் அளவிற்கு
வளர்ந்து நிற்குதம்மா

**கவலையும் சுகமானது**

கவலை கவலை கவலை
கவலை கொடிது என்றார்கள்
அம்மா உன்பிரிவை நினைந்து
கவலை கொள்வதும் கண்ணீர்
விடுவதும் சுகமானதே
உனக்கு மட்டும் ஏன்
இந்த விதிவிலக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரதம்

நாள்பேர் சொல்லியும் கோள்பேர் சொல்லியும்
கடவுள் நாமம் சொல்லியும் அப்புவுக்கும்
ஆச்சிக்கும் என்று சொல்லி விரதம் பல
பிடித்திடுவாய்
வேடிக்கை பார்த்தோம் நாம் ஒருவேளை
உணவைத்தனில் விட்டே வைத்ததில்லை
தாற்பரியம் புரியவில்லை
முட்டாள் அம்மா இவள் உடலை வீணே
வருத்துகிறாள் என்று நான் நினைக்க
உன்கேள்விக்கு இப்போது பதிலில்லை
சொன்னாலும் புரியாது. மௌனமே
பதிலானாள்
புரிகிறது இன்று அர்த்தம் புரிகிறது
உன்நினைவே எனக்குணவு
ஓராயிரம் ஜென்மங்கள் விரதத்தில்
திழைத்திருப்பேன்.

## உறவு

மாலை மணி நான்கு அடித்துவிட்டால்,
நடுக்கதவை பூட்டிவிட்டு மடியில் திறப்பை
சொருகிக் கொள்வாய். தஞ்சாவூர்த் தேர்போல
மெல்ல ஆடி ஆடி நீ நடந்து ஒவ்வொரு
படியாய் ஏறிடுவாய், அங்கு மதுரை அக்கா
வரவைநாடி பலமுகங்கள் காத்திருக்கும்.
அங்கு வெற்றிலையை நீ குதப்பி கதை அளந்து
தர்ப்பார் செய்வாய். உறவாடி வீடுசேர
மணி ஆறு ஆகிவிடும்!
நீ செல்லப்பிந்திவிட்டால், அவ்வுறவுகள்
ஒவ்வொன்றாய், மதுரை என்றழைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்படி தேடிவரும்
நீ சென்ற இடமெல்லாம், புதுப் புது
உறவுகள் முளைவிட்டு வளர்ந்து வரும்
அன்னியர் என்பது உன் அகராதியில் இல்லை
உயர்ந்தவர், தாழ்ந்தவர் பேதம் எதுவும் இல்லை.
எல்லோர்க்கும் உன்தராசு சமபாரம்
காட்டும்.
இன்றும் அப்படிகள் உன்வரவை நாடும்
அந்தோ பரிதாபம் நீ அங்கு இல்லை,
உறவுகளை வசீகரிக்க நீ எங்கு கற்றாய்
நான் ரகசியத்தை அறியுமுன்பே
மெல்ல நழுவி விட்டாய்

## முருகனுடன்

மஞ்சவனப்பதிமுருகன் அது எம் குல தெய்வம்,
என்று நீ அடிக்கடி உச்சரிப்பாய், உன்பேச்சிலும்
எழுத்திலும் அவன் நாமம் நிறைந்திருக்கும்.
அப்பனவன் திருவிழாவும் கிட்டிவிட்டால்,
ஓயாத பம்பரமாய் உன்கால்கள் ஆடிவரும்
ஆசை ஆசையாய் ஒவ்வொன்றும் சேர்த்திடுவாய்
அப்பனுக்கு என்று சொல்லி வகை வகையாய்
தேடிடுவாய், அவனை அலங்கரித்து அழகு
நீயும் பார்த்திடுவாய், வாட்டும் நோயிலும்
நீ வீழ்ந்து படுத்ததில்லை. எம்வீட்டு நிகழ்வாக எல்லாம்
அரங்கேறும்.
எம்மிளமை நெஞ்சினிலே நீ விதைத்த விதைகள்
என்றும் பசுமையாய் முளைகொண்டு
வளர்ந்து வருகுதம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடை எங்கே

கற்கிறோம் கற்கிறோம் தொடர்ந்து கற்றும்,
உன்னை கிட்ட நெருங்க முடியவில்லை
எங்கோ அகப்படுவாய் என்று பின் தொடர்ந்து
நாம் துரத்த நீ லாவகமாய் எட்ட எட்டச்
சென்று, எட்ட முடியாமல் நிற்பாய்
பிள்ளை ஒன்று பேதலித்து எக்கோடியில்
நின்றாலும், வாயுண்டு வங்காளம் போய்வருவேன்
என்று, இராமனின் அனுமார்போல் புயல்வீச்சில்
கடல் கடப்பாய், களத்தில் இறங்கிடுவாய்
நொடியில் வினை தீர்த்திடுவாய். ஞானத்தின்
சொரூபம் உனை பிடிப்பதற்கு நாம் கலைத்தோம்,
களைத்தோம் தொடர்ந்தும் கலைத்தோம். இடையில்
பக்குவம் வந்ததுவோ என்று எம் மனதில்
அங்கலாய்ப்பு. முட்டாள் பிள்ளைகளே
உங்களை சரிபார்த்து கொள்ளுங்கள் என்று
மின்னாமல் முழங்காமல் உன் பல்கலைக்கூடத்தை
நிரந்தரமாய் மூடிவிட்டாய்
எம்மனதில் புதிதாக கேள்விகள் பிறக்கிறது
விடைதேடி அலைகின்றோம்
அம்மாவை காணவில்லை.

## உவமை இல்லை

எதனுடன் ஒப்பிட உன்னை எதனுடன்
ஒப்பிட, கற்பகதருவோ காமதேனுவோ
இல்லை, இல்லை. இவை நாம் நினைத்தால்
மாத்திரமல்லவோ தரும். அட்சய பாத்திரமோ,
கழுவிக் கவிழ்த்துவிட்டால் தரமாட்டாதே
கர்ணனுக்கு எதிர்வீடோ. இல்லை
அவன் வாழும் போதல்லவோ கொடுத்தான்
நீ சீதக்காதியின் பேர்த்தியோ, இருக்கலாம்
ஆனால் நீ இன்னும் இன்னும் உன்னுடன்
ஒப்பிட என்னிடம் ஒரு உவமை இல்லை ஓ!
அதுதான் தாயன்போ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகக்காட்சி

ஆண்டு 94 அன்று செய்தி ஒன்று
"உன் அம்மா வீட்டிற்கு வந்துவிட்டா"
ஓடோடி வந்தேன்காண. ஆறுதலாய்
அமர்ந்து நாம் மனதை பகிர்ந்து கொண்டோம்.
போகும் வேளை வந்தவுடன் போய்வாறேன்
என்று நான் உந்துருளியில் ஏறிவிட்டேன்
பின் தொடர்ந்து வந்து நீ உன்திட்டம் என்னவென்றாய்
என் மௌனத்தின் அர்த்தத்தை ஓர் நொடியில்
புரிந்து கொண்டாய். இடுப்பில் இரு கை வைத்து
என்மேல் கண் எறிந்தாய். கணப்பொழுதிருவர்
கண்ணும் கலந்து கொண்ட வேளை, உன்
ஆசியை ஒழியாக என்மீது பாச்சி விட்டாய்
பாலுண்ட குழந்தைபோல் மனம்நிறைந்து நான்
சென்றேன். பஞ்சாய் இருந்தமனம் எஃகாக
இறுகியது. கருமங்கள் அத்தனையில் கவனம்
ஊன்றியது.

என் மனம் எங்கோ நாடியது
பள்ளி மாணவர்க்கு சுகமாய் கல்வி
கற்க மார்க்க மொன்றை தேடியது. கிடைத்த
தாளிலெல்லாம் கிறுக்கத் துவங்கிவிட்டேன்.
எழுத்தெல்லாம் சேர்ந்து ஓரு புத்தகமாய்
உருவாக
அதை என்னென்பேன்
திடீரென ஓரு அகக்காட்சி
"மஞ்சவனப்பதி முருகன் கோவில் அங்கு
நான் உள் மண்டபத்தில் கோபுரவாசல் அருகே.
ஆதிமூலத்தில் அதிகாலைப்பூசை வேளை
சுப்பிரமணியக்குருக்கள் பஞ்சாலாத்தி காட்டுகிறார்.
அங்கு மூர்த்தியின் வடிவத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உள்ளம் தெரிந்தது"
அதிர்ந்துவிட்டேன்
காலா காலாமாக நீ ஊட்டியபக்தியில்
கடவுள் வெளியே என்றெல்லோ நான்
நினைத்தேன். மனதுள்ளே போராட்டம்
நாளிகைகள் ஓட ஓட மூளை விடை
தேடியது, வேட்டை ஒன்றை நடத்தியது
வாழ்நாளில் என்றுமில்லா மனக்களைப்பு
விடையும் கிட்டியது
தெய்வம் வெளியில் இல்லை எம் உள்ளத்தில்
உள்ளே உள்ளமாக
அப்போ யாரை நாம் தெய்மென வணங்குவது?
அடுத்த வினா குடைந்த தென்னை
மீண்டும் வேட்டை ஆடிவந்தேன் மிகுதி
விடையும் தேடிவிட்டேன்
மாதா, பிதா, குரு, நற்காவலனே எம் தெய்வம்
இச்செய்தி நான் சொல்ல உன்வரவை நாடிநின்றேன்
முன்பே தெரியுமென்று கேட்கமுன்பே
ஓடிவிட்டாய்.

**அம்மாவிற்கு காணிக்கை**

செய்கருமம் கருத்தூன்றி செய்திடல் வேண்டும்
தெய்வத்தை அனுகணமும் தேடிடல் வேண்டும்
நன் நூல்கள் நெஞ்சத்தை நிறைத்திடல் வேண்டும்
எட்டும்வரை தேடலை தொடர்ந்திட வேண்டும்
எண்ணத்தில் அசையாத நம்பிக்கை வேண்டும்
கிட்டுமெங்கள் பார்வைக்கு இறைவனின்காட்சி
உயர்ந்ததும், தாழ்ந்ததும், உயிர் உள்ளதும் அற்றதும்
எல்லாமே ஒன்றென்று அப்போபுரியும். தெளிந்தபின்
புத்துலகொன்று எங்களின் அடியில்
அனுபவத்தில் அறிந்துகொண்டால் இன்பத்தின் பிடியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்மா உன் பிரிவுச் செய்தியாம்**

என்றவுடன் மனம் புரண்டு மீட்டவை
பல இருந்தாலும் என்மனம் நம்ப
மறுத்ததால் மீட்டலில் சில தந்தேன்.
இதை ஏன் அப்புவின் நினைவுகளே
எம் நெஞ்சில் இன்றும் பசுமரத்து ஆணி.
அதுவே கலையுமுன் உனக்கென்ன அவசரம்
இதை நீ படித்தபின்
அப்பா, அண்ணா, தங்கை, தம்பிமார்
எல்லோர்க்கும் உன்
தர்ப்பாரில் படித்து காட்டு

மீதி உன் கடிதம் கண்டு
என் கடிதம் தொடரும்
இன்று என்றுமில்லாதபடி உன்னை
ஆரத்தழுவி முத்தமிட
என்மனம் ஏனோ துடிக்கிறது.
என் தழுவல்களையும்
முத்தங்களையும்
ஏற்றுக்கொள்.

விடைபெறுகிறேன்...

எனது புதுவருட வாழ்த்துக்கள்

இப்படிக்கு
அன்பின் மகன்
**முரளி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

நல்லூர் யாழ்ப்பாணம் – இலங்கை

Nallur Thirugnanasampandar Atheenam
Nallur, Jaffna, Sri Lanka.

## இரங்கற் செய்தி

திருமதி அருள்பிரகாசம் வள்ளியம்மை அவர்களின் மறைவு அனைவரையும் ஆறாத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்னாள் அறங்காவலர் சபைத் தலைவராக இருந்த அருள்பிரகாசம் அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியாகவிருந்து அவர் ஆற்றிய சமய, சமூகப் பணிகளுக்கு தோளோடு தோள்நின்று உதவி புரிந்த வள்ளியம்மையவர்கள் மிகுந்த தெய்வ நம்பிக்கையுடையவர். சமூகப்பணிகளிலும் தன்னால் ஆன பணிகளை மக்களுக்கு ஆற்றியுள்ளார்.

உடல் அழிவு என்பது மனிதன் தான் அணிந்திருக்கும் உடையைக் கழற்றி இன்னொரு ஆடையை அணிந்து கொள்வது போலாகும். நிலையில்லாத இந்த உடம்பை வாழ்நாளில் தருமப் பணிகளுக்கு ஈடுபடுத்திக் கொள்வது எமது தலையாய கடனாகும். திருமதி வள்ளியம்மை அருட்பிரகாசத்தினது மறைவும் அது போன்றதே.

அம்மையாரின் இழப்பினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் இறைவனின் ஆசிகிடைக்கவும் அம்மையாரின் ஆன்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**குருமகா சந்நிதானம்**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்
நல்லூர், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலிப்போம்

கொக்குவில் மஞ்சவனப்பதியைத் தாயகமாகவும் கொழும்பு மாநகரை வதிவிடமாகவும் கொண்டு பல்லாண்டுகாலம் அருட்பணியும், அறப்பணியும், ஆற்றிவந்தவர் அமரர். திருமதி. வள்ளியம்மை அம்மையார் அவர்கள். இவருடைய கணவனார் திரு. அருள்பிரகாசம் என்பவர் எமது யாழ் மண்ணில் உயர் பதவி வகித்து அரும்பணியாற்றிய பெருமைக்குரியவர். இவர்களின் பேராதரவினால் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் தேர்த்திருப்பணி சிறப்பாக நிறைவேறியது. மேலும் இவ்வாலயத்தோடும் மக்களோடும் நீண்டகாலத் தொடர்புடைய வர்களாக வாழ்ந்த குடும்பத்தவர்கள் இவர்கள்.

அறவோர்க்களித்தல். அந்தணர் ஓம்பல். விருந்தெதிர்கூறல் ஆகிய பண்புகள் அம்மையார் அவர்கள் பல்லாண்டு காலமாக முன்னின்று பங்கு கொண்ட பெருமைக்குரிய பண்புகளாகும். மஞ்சவனப்பதி முருகப்பெருமான் பேரருளினால் இவ்வாலயத்தின் சூழலில் வாழும் மக்கள் அனைவரும் பக்திப் பெருக்கும் பண்பாட்டுச் சிறப்பும் செல்வச் சிறப்பும் உடையோராய் வாழுதல் கண்கூடு. வாரியார் சுவாமிகள் போன்ற பேரருளாளர்கள் பலர் இவ்வாலய மகோற்சவங்களில் வருகைதந்து இன்னிசை விரிவுரையை ஆற்றியமையை இன்றைக்கும் நாம் நினைப்பூட்டிக் கொள்கின்றோம். பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் அங்கு கூடி நின்று இவ்வுரைகளைச் செவிமடுப்பதை நான் கண்ணாரக் கண்டிருக்கிறேன். இத்தகைய அருட்சிறப்பு வாய்ந்த திருக்கோயிலின் மீளா அடிமையாக வாழ்ந்த அம்மையார் அவர்கள் இன்று எம்மத்தியில் இருந்து மறைந்து விட்டார். கலியுகவரதனாகிய கந்தப் பெருமான் அன்னாரின் மறுமைப் பேற்றுக்கு அருள் புரிவாராக என்று கூறி அமைகின்றேன்.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.**

தலைவர்

**துர்க்கா தேவி தேவஸ்தானம்**

தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஞ்ச வனப்பதி முருகன் துணை!

*வள்ளி தேவசேனா மஞ்சவனப்பதி முருகனுக்கு வலம்வர சித்திர தேராம்,*
*வானுலகம் வலம் வர அளித்திட்ட பொற்தேராம்*
*அமரர் வள்ளியம்மைக்கு!*

## சிறப்பு:

சீரும் திருவும் பொழியும் புண்ணிய பூமியாம் இலங்கை மணித்திரு நாட்டின் மகுடமெனத்திகழும் யாழ்ப்பாணத்தில் நீர்வள நிலவளங்களால் அருளும் பொருளும் சிறந்து சைவமும் நற்றமிழும் தளைத்தோங்கும் வட பாகத்திலே செந்நெல்லும் கமுகும், தென்னை, மா, பலா, வாழையும் மல்கிய வளஞ்சேரி முக்கனிகளாம். ஈழத்தமிழ் நகரின் இணையற்ற தலை நகரமாம், கூழ்பானை ஏந்தி குலவுதமிழ் யாழ் பாடி பெற்ற யாழ்ப்பாணம். திருவோங்கு சைவ நெறி தழைத் தோங்க, வளமார்ந்த கருவோங்க கல்லூரிகள், வித்தியசாலைகள் செறிந்து தான் விளங்க, அருளோங்கு சைவாலயங்கள்தான் விளங்க, அறம் போற்றும் மறங்காக்கும் மறத்தமிழர் மொழிகாக்க, உறங்காது உழைக்கின்ற மனம் படைத்த திறமோங்கு குடிகள்தான் சிறந்தோங்க வளர்ந்தோங்கு புகழ் படைத்த கொக்குவிலாம் முதுநகரில் உண்டன்றோ ஸ்ரீவள்ளி தேவசேனா முருகப் பெருமான் மஞ்சவனப்பதி தனில் வேண்டுவோர்க்கு வேண்டுவதை ஈவான் சிறந்து.

## *செல்வங்களுட் பெருஞ்செல்வம் மக்கட் செல்வமே!*

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு! கொக்குவில் கிராமத்தில் வர்த்தகத்திலும் வாணிபத்திலும் சிறந்து விளங்கிய ச. வே. சண்முகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையவர்கள் தம்பதியினரின் ஏக புதல்வியாம் வள்ளியம்மை. தன் முயற்சியாலும் திறமையாலும் பெரும் புகழும் பெரும் செல்வமும் ஈட்டிய சண்முகம்பிள்ளையவர்கள், மக்கட் செல்வமில்லாக் குறை பெருங் குறையாக கண்டு மனம் நொந்து வேதனையுடன் இருந்த வேளைகளில் ஒருநாள் கனவுதனில் தங்கள் குல தெய்வமாம் மஞ்சவனப்பதி முருப்பெருமான் அந்தணர் வடிவில் தோன்றி காஷ்மீர் வெல்வெற் பட்டை காட்டி இதில் பொத்தல்கள் விரிந்து விட்டன தைத்து தாருங்கள் என்று சொல்லி மறைந்தார். இதை நித்திரை விட்டெழுந்து தன்னோடு தொடர்புடையவர்க்கெல்லாம் சொல்லியும் கேட்டும் கருத்தும் காரணமும் விளங்காது நின்றார்கள் ஒரு பொழுது நீர்கொழும்பிலிருந்து தங்கள் ஊர் கொக்குவிலுக்கு வருகை தந்த போது மஞ்சவனப்பதி முருகன் ஆலய பூசகர் செல்லத்துரைகுருக்கள் சண்முகம்பிள்ளையவர்களின் வருகையையறிந்து முருகன் ஆலயத்தில் முருகனுக்கு கும்பாபிஷேகமாகி பல காலங்கள் ஆகிவிட்டது என்று சொல்லி, ஆலய தன்மைகளையும் சொல்லி ஆலயத்திற்கு வரவழைத்து காண்பித்தனர். அவ்வமயமே முருக பெருமானுக்கு ஆவனவேண்டியவைகளை செய்ய மனசங்கற்ப்பம் செய்து கொண்டு வேதஆகம பாண்டித்தியமுற்ற நீலகண்ட குருக்கள் மூலமாக பாலஸ்தாபனம் செய்வித்து முருகனின் யந்திரமதை எடுத்து பார்த்த போதுதான் கண்ட கனவை நினைவு கூர்ந்தார்கள். கனவினில் எப்படியாக பொத்தல்களாயிருந்தனவோ அப்படியான பொத்தல்கள் யந்திரத்தில் இருக்ககண்டார்கள் முழுமையாக அவற்றை சரி செய்து ஆலய புனர்கும்பாபிஷேகமும் சந்தானவிருத்தி வேண்டி 1933ம் ஆண்டு ஆவணிமாதம் திருவோண நட்சத்திரத்தில் சந்தான கோபாலர் ஆலயமும் புதிதாக கட்டிவித்து கும்பாபிஷேகமும் செய்வித்தார்கள். மஞ்ச முருக பெருமான் திருவருளால் 1939ம் ஆண்டு அழகிய பெண்பிள்ளையை பெற்றெடுத்தார்கள். சண்முக பெருமானுக்கு பல பெறுமதிமிக்க பெரிய சித்திர தேர் கட்டுவித்து 1939ம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளோட்ட விழா நடாத்தப்பட்டது. சிறிய சூழலாயிருந்த முருக பெருமானின் நிலப் பரப்பு இப் பெரிய தேர் ஓட வீதியின்மையை எண்ணிப் பக்கங்களில் இருந்த காணிகளை காணிக்காரர்களோடு உள்ள தொடர்புகளினால் திரு. ச. வே. ச. நாற்புறமும் சொந்தமாக வேண்டி அடியவர்க்கு அன்னமிட அருணகிரிநாதர் மடமும் தென் மேற்கு மூலையில் அமைத்து ஆலய வளர்ச்சியையும் திருவருள் தன்மையால் மேலும் தங்களின் வர்த்தகமும் வாணிபமும் சிறக்க முருகனுக்கு ஆலய கோபுரம் 1946ம் ஆண்டு கட்டி முடித்து தன்னோடு சரிநிகராக தனக்கு உதவி புரிந்த திரு. கு. வே. நாகலிங்கம் என்பவர் பெயரில் ஞானவைரவர் கோவிலும் அமைத்து, ஆனிமாத அனுஷநட்சத்திரத்தில் கும்பாபிஷேகமும் செய்வித்து, பொது மக்களால் அமைக்கப் பெற்ற முன் மண்டபத்திற்கு தேக்கு மரதீராந்தி கொடுத்து திருப்பணிகளும் நிறைவுற செய்து மகிழ்ந்து வாழும் நாளில் மகள் வள்ளியம்மை நாள் ஒரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் நன்னாள்தனில் இராமநாதன் கல்லூரிதனில் கல்வி பயில வைத்து உரிய வயதினிலே சொந்த மாமாவாம் குமாரசாமி புலவர் அவர்கள் தீட்சைஅளித்து சமய அறிவும் புராண படிப்புகளிலும் சாஸ்த்திரக்கல்வி, கேள்விகளிலும் சிறந்து விளங்கவைத்தார். திருமணப்பருவம் எய்திய வள்ளியம்மைக்கு பெற்றோர்கள் அயலூர் ஆனைக்கோட்டையதில் இராஜரட்ணம் தம்பதியினரின் அன்பு மகன் டாக்டர் அருள்பிரகாசம் அவர்களை திருமணம் செய்து வைத்து அன்பானபேரக்குழந்தைகளையும் மக்கட் செல்வங்களைப் பெற்று வாழும் நாளில் மஞ்சவனப்பதி முருகப் பெருமானுக்கு 1964ம் ஆண்டு முதல் பெரும் திருப்பணிகள் செய்தும் செய்வித்தும் 1968ம் ஆண்டு பங்குனி மாதம் கும்பாபிஷேகமும், செய்வித்தார்கள். கொழும்பில் இவரோடு தொடர்புடையவரும் கொக்குவில் தனவந்தருமான நீதிராஜாவும் சேர்ந்து பெரும் திருப்பணிகளை நிறைவுசெய்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூண்டா மணி விளக்கு

வள்ளியம்மையவர்கள் பிறந்தவீடும், புகுந்தவீடும், செல்லபிள்ளையாகவும், செல்வபிள்ளையாகவும், சந்தானம் தழைக்க ஆண்குழந்தைகளையும், ஒரு பெண்குழந்தையும் அருளோடு கூடிப் பெற்று. அருள்பெற்று தூண்டாமணிவிளக்காய் ஒளிவிட்டு, தர்மங்கள், தானங்கள் பலபுரிந்து கல்லூரிகள், பாடசாலைகளுக்கு அறப்பணிகள் புரிந்து, நல்லோர் உறவும் நல்லாசிகளும் பெற்று, வாழ்வினில் மக்கட் செல்வம், மனை செல்வம், உற்றார், ஊரார் மதிப்புடனும் வாழ்விலே !

## அனுபவிக்க ஆற்றல்

இளவயதின் படிப்பும், அனுபவிக்க ஆற்றலும் கொண்டு, துன்பத்திலும், இன்பத்திலும் தம்மையும் தம்மை சார்ந்தவர்களையும், ஆற்றிதேற்றி ஆவன செய்தும் அன்பு, நெறி அற நெறிகளில் அறங்களில் அன்பு முதன்மையானது. ஒவ்வொரு மனிதனிடத்தும் கட்டாயமாக இருக்க வேண்டியது அன்பு என்ற குணாம்சங்களை காட்டி வள்ளுவனார் தந்த தெய்வீகத்திருமுறை சொல்லி "அன்பின் வழியது உயிர் நிலை அ∴ திலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு "என்று அனுபவமிக்க பல உதாரணங்கள் காட்டி ஆற்றல்படுத்தி, வேதனைகளை மறக்க செய்து சிரித்து சிரிக்க வைத்தும் வாழ்ந்த பெருந்தகை.

## எண்ணியவை எண்ணியவாறே!

எவரோடும் திண்மையாகவும், உண்மையாகவும் சொல்வார் செய்வார் செய்யவைப்பார். மலைக்கும் தலைக்கும் தொடர்பு கொண்டு எண்ணங்கள் சொல்வார். சேற்றுக்கும் தண்ணீருக்கும் தொடர்பு கொள்வார். ஆற்றல்மிக்க எண்ணங்களை சொல்வார். பல வழிகளில் உதாரணங்கள் காட்டி புண்பட்ட நெஞ்சங்களுக்கு மருந்து போல எண்ணங்கள் காட்டி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவைத்துவிடுவார். ஆண்மைக்கும் பெண்மைக்கும் சரிசமா் நின்று வாழ்வினிலே சாதித்த காரியங்கள் பலவுண்டு.

## வைரமில்லா நெஞ்சம்

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளினால், வைரமில்லா நெஞ்சம் என ஆசிபெற்ற நங்கையர்களுள் வள்ளியம்மையாரும் ஒருவர். மஞ்சவணப்பதிமுருகன் ஆலயத்திலே 1952ம் ஆண்டு திருமுருககிருபானந் தவாரியாரின் முதல் பிரசங்கம், சண்முகம்பிள்ளை அவர்களினால் முன்னின்று நடாத்தி வைக்கப்பட்டது. 1954ம் ஆண்டு தொடர் பிரசங்கமாக 10 நாட்கள் நடைபெற்ற போது மஞ்சமருதிகாடு என்னும் தோம்பு பெயரை, வாரியார் சுவாமிகள் மஞ்சவணப்பதி என்ற **மஞ்சவனப்பதிபதிகம்** பாடி சிறப்பித்தமையும், அவ் ஆண்டு திருமணமாகிய முதல் தம்பதியராம் டாக்டர் அருள்பிரகாசம் வள்ளியம்மை அவர்கட்கு ஆசீயும் கூறி, அவர் ஆற்றிய உரையினிலே வள்ளிக்கு வைரம் மூக்குத்தியிலே, வைரம் காதிலே வைரம், கையினிலே வைரம். கழுத்தினிலே வைரம் ஆனால் வைரம் எங்கில்லை வள்ளிமைக்கு நெஞ்சினிலே வைரமில்லை என்று தனது கதையினிலேயே! *முருகன் யார்?* அருள் சக்தி, தேவ சேனாயார், கிரியாசக்தி, வள்ளியார் இச்சா சக்தி, வேல்யார் ஞானசக்தி என்பதையும் தத்துவமாக காட்டிய பெரும் தனவந்தர் அல்லவா சண்முகம் பிள்ளை. *மருமகன் யார்?* வைத்திய கலாநிதி அருள்பிரகாசம் அல்லவா என்பதையும் காட்டி வைரமில்லா நெஞ்சம் என்பதை ஆசி கூறிய பெருமை பெற்றவர் வள்ளியம்மையே!

## இறைவன் எழுதிய தீர்ப்பு

எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன். நான் பார்த்த தேர் திருவிழா, பக்தர்கள் சூழ்ந்துவர மேளவாத்தியங்கள் முழங்க, பட்டாடைகளாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவித அணிகளாலும் அலங்கரிக்கப்பட்ட முருகப்பெருமான் அலங்கரிக்கப்பட்ட தேரில் பவனிவந்தார். அந்த அழகான காட்சியையும் பெற்றுக் கொண்ட அருள் அனுபவத்தையும் மறக்க முடியாது.

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."* 15-10-1897ம் ஆண்டு பிறந்து 20-08-1970 ஆண்டு அமரத்துவம் எய்திய தந்தையாரின் அடிசுவட்டை ஒட்டியே மருகனார் வைத்திய கலாநிதி அருள்பிரகாசம் வள்ளிமையும் மஞ்சவனப்பதி முருகனுக்கு பல திருப்பணிகளையும், திருவிழாக்களையும் அறங்காவல் பணியையும் சண்முக பெருமானுக்கு வேண்டியதான காரியங்களையும் 60ம ஆண்டு பவளவிழா *புணார்தாருமம்* செய்ய வேண்டுமென்ற எண்ண ஆவலோடும், எல்லா நிறைவோடும் அமரத்துவம் பெற்ற வைபவம் இறைவன் எழுதிய தீர்ப்பு. அமரர் வானுலகம் வலம்வர அளித்திட்ட பொற் தேராம். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல மஞ்சவனப்பதி முருகப் பெருமான் பாத கமலங்களுக்கு எமது அஞ்சலி செய்து வணங்குவோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

*இங்கனம*

**சிவஸ்ரீ வை சுப்பிரமணிய குருக்கள**

மஞ்சவனப்பதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மார்த்த அஞ்சலி



மஞ்சவனப்பதி முருகன் ஆலய ஆரம்ப தர்மகர்த்தா சபைத்தலைவர்,
அமரர் ச. வே. சண்முகம்பிள்ளை அவர்களின்
ஏக புத்திரியும், ஆலய முன்னாள் நிர்வாக சபைத் தலைவர்
டாக்டர் இ. அருள்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியுமாகிய,

**வள்ளியம்மை**

அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும்,
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
மஞ்சவனப்பதி முருகனை பிரார்த்திக்கிறோம்.

ஆலய சேவையில்,

**இ. இராசலிங்கம்**
செயலாளர்,

**த. கணேசபிள்ளை,(B. A.)**
தலைவர்,

நிர்வாகசபை.
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு இந்து வாலிபர் சங்க அப்பர் அருள் நெறி மன்றம்

# அமரர் வள்ளியம்மை

## சிவபதப்பேறு குறித்த அஞ்சலி

அமரத்துவம் எய்திய மதுரையக்கா (வள்ளியம்மை) அவர்கள் என்னோடும், எமது சகோதரர்களோடும், மிக அன்பாகவும், அன்னியோன்யமாகவும் பழகி வந்தார். அவர் எங்களுக்கு உறவு முறையில் சகோதரி அத்தோடு எங்களில் தனியான விருப்பத்தையும் கொண்டிருந்தார். யாழ்ப்பாணத்திலே ஊரில் இருக்கும் பொழுது, எங்களுடைய அம்மாவிடம் சென்று, அடிக்கடி சுகம் விசாரித்துக்கொள்ளுவார். இங்கே கொழும்பிற்கு வந்தால், வருகின்றநேரமெல்லாம் கணவனோடும், தனித்தும் வந்து சுகம் விசாரித்து, மகிழ்ச்சியாக கதைத்துவிட்டுச் செல்வார். நீர்கொழும்பில் இருக்கின்ற காலங்களிலும், எம்மைத் தேடி வந்து உறவு கொண்டாடுவார். வருவதற்கு வசதி கிடைக்காத நேரங்களில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, எம்முடன் உரையாடி திருப்தி கொள்வார்.

எத்தனையோ மகிழ்ச்சிக்கு மத்தியிலும், அவருடைய உள்ளத்திலே, ஒரு கவலை இருப்பதை சிலவேளைகளில் சொல்லியிருக்கிறார். 30-10-1995 அன்று யாழ்ப்பாணத்து மக்கள் அனைவரும் புலம் பெயர்ந்து, உறவுகள், கட்டுக் கோப்புக்கள் குலைந்து, சின்னாப்பின்னப்பட்டு, வடமராட்சி, தென்மராட்சி, வன்னி, கொழும்பு போன்ற ஊர்களுக்கு யாவரும் சென்று வாழ்வது குறித்தும், உறவுகள் எங்கெங்கோ எல்லாம் இருந்து படுகின்ற துன்பங்களை எண்ணியும் கவலைப்படுவதுண்டு. ஆனால் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் ஓரளவிற்கு மீள் குடியேற்றம் நடந்திருந்தாலும், முன்னர் வசித்த இடங்களிற்கு அனைவரும் செல்லவில்லை என்பதும், ஒரு மனக்குறையாக இருந்து வந்துள்ளது. அன்னார் நாட்டில் சாந்தி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம், இன ஒற்றுமை சகல மக்களும் கௌரவமாக மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என விரும்பி இருந்தார். அன்னாருடைய விருப்பம் இந்த புதிய வெகுதானிய ஆண்டிலே நிறைவேற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

அன்னாரது ஆத்மா சாந்தி அடைய எங்கள் மன்றத்தின் சார்பாக, அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரது பிரிவால் துயருறும், அவரது குடும்பத்தவர் அனைவரிற்கும், எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

319/15, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திரு. S. தெய்வேந்திரம்**
செல்வி. கோமதி சுப்பையா,
142, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

## ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் அருளியது

- பெறுதற்கரிய இம்மானிடப் பிறவியைப் பெற்றவன் இப்பிறவியிலேயே ஈசுவரனை அறிய முயலாது போனால் வீணில் பிறந்தவனேயாவன்.

- முதலில் ஈசுவரனைத் தேடி, அப்பால் உலகப் பொருளை தேடு. இதற்கு மாறாகச் செய்யாதே. ஆதம்ம ஞானத்தை அடைந்த பின்பு நீ உலக வாழ்க்கையில் பிரவேசித்தால் உனக்கு மனச்சஞ்சலமே இராது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கந்தபுராண கலாசாரத்தின் காவலர்கள் மேலைக் கொக்குவில்*
*திருமதி வள்ளியம்மை அருள்பிரகாசம்*

# பெயருக்கேற்பத் தெய்வீகமானவர்

மேலைக் கொக்குவில் சண்முகம் வேலுப்பிள்ளை சண்முகம்பிள்ளை அவர்களின் புண்ணிய புத்திரியாய்ப் பிறந்து மஞ்சவனப்பதிமுருகனருளால் வாழும் வள்ளியம்மையாய், வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வமாகிவிட்ட அந்தப் புண்ணியவதி திருமதி வள்ளியம்மை அருள்பிரகாசம் அவர்களின் அறச்சிந்தனையை நினைக்கின்றோம்.

நாவலர் பெருமான் காலத்தில் புத்தெழுச்சி பெற்ற கந்த புராண கலாசாரத்தின் காவலர்கள் என்று மேலைக் கொக்குவிலில் வாழ்ந்து வளம்கண்டு புண்ணியங்கள் பல செய்து அம்மையாரின் குடும்பம் கந்த வழிபாட்டில் ஊறித்திளைத்த குடும்பம். அவர்கள் தமக்கு இட்டுக் கொண்ட நாமங்களே அதைச் சொல்லும். அருள்வாசம் ஊறும் அமரரின் பாட்டனார் சண்முகம், ஆறுமுகக் கடவுளின் பெயரினர். அவரின் மகனார் வேலுப்பிள்ளை. வேலினைக்கையிலேந்திய பிள்ளைப் பெருமான் – முருகனின் பெயரினர். அவரின் மகனார் நம் அமரரின் தந்தையார் சண்முகம்பிள்ளை. "பெயரன்" என்ற பதத்திற்குப் பொருத்தமாகப் பேரன் சண்முகத்தின் பெயரினை, முருகனின் நாமத்தைத் தமக்கும் சூடிக் கொண்டவர். இவையெல்லாவற்றுக்கும் மேலாக வைத்தியகலாநிதி அருள்பிரகாசத்தின் இல்லத்தரசியாகப் பின்னர் வாய்த்த, சண்முகம் பிள்ளையாரின் மகளாரும் வள்ளியம்மை என்ற பெயர்ப் பொருத்தத்தைப் பார்க்கிறோம்.

கந்தபுராண கலாசாரத்தை அடியொற்றி, கந்தவழிபாட்டு மரபுக்கு அழுத்தம் கொடுத்த பிரபலவணிகர்திலகம் மஞ்வனப்பதி சண்முகம்பிள்ளை ஐயாவைச் சார்ந்த அனைவரும் பொருத்தமாகக் கந்தனோடு தொடர்புடைய நாமங்களையே சூட்டி மகிழ்ந்த வித்தையை அறிந்தாரே வியந்து மகிழ்வர்.

மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் பிரகார அமைப்புகள், வீதிகள், தேர் ஊர்தி முதலாம் சகல அம்சங்களிலும் பணியாற்றி, தம் செல்வத்தை வாரிக் கொடுத்த வள்ளல்களின் வரிசையில் அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியம்மையும் இடம் பெறுகிறார்.

இளமையிலிருந்தே சைவப் பண்பு, ஆசாரம் நிறைந்தவராய் வாழ்ந்த நவீன திலகவதியார் அவர்கள் சைவப் பெண்களுக்கெனவே அக்காலத்தில் இராமநாதன் துரையவர்கள் கட்டிவைத்த மருதனார் மடம் இராமநாதன் பெண்கள் உயர் நிலைக்கல்லூரியில் திறமையாகப் பயின்று கல்வியும், கலையும், பண்பும், பரோபகார சிந்தையும் கொண்ட சிறந்த நங்கையாய்த்திகழ்ந்தவர் அமரர் வள்ளியம்மை. கொக்குவில் குமாரசாமிப்புலவர் முதலாம் நல்லாசிரியரிடம் சமயக்கல்வி பயின்று உரிய பருவ மெய்தியதும் உயர்பதவி பெற்ற டாக்டர் அருள்பிரகாசம் ஐயாவை ஊரும், உலகும் போற்றக் கூடி மணமார்ந்து சிறந்து வாழ்ந்த வரலாறுயாருக்கும் கிடைக்காதது. மேற் குணங்கள் மிக்க சீமாட்டியவர், சண்முகம் ஐயா அவர்கள் மகள் பிறந்ததும் மஞ்சவனப்பதி அப்பனுக்கு மகத்தான தேரொன்று 1939இல் செய்வித்து வள்ளியம்மை தெய்வயானை சமேத சண்முகரை அதில் இவர் வர முன்னின்ற காட்சி மறக்கொணாதது. மாமனார் செய்த அறப்பணியை, மருமகன் டாக்டர் அவர்கள் தொடர மன்னனுக்கு வாய்த்த மகா ராணியாய் முன்னின்று நடத்திய திருமதி வள்ளியம்மை அவர்களின் பரோபகார சிந்தையும் கொக்குவிற்பகுதியே அறியும்.

சுகாதாரப்பகுதி சுப்பிரின்டணாக இருந்து டாக்டர் அருள்பிரகாசம் அவர்கள் ஓய்வு பெற்றகாலை 1980 இல் அமரர் திருமதி வள்ளியம்மை அவர்கள் மஞ்சவனப்பதி முருகனின் இரதோற்சவத்தை மிக ரம்மியமாக, பக்திபூர்வமாக முன்னின்று நடத்திய நாள் நினைவுக்கு வருகின்றது.

*அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
*பிறன்பழிப்ப தில்லையின் நன்று*

என்றார்வள்ளுவரும்

இல்வாழ்க்கையை ஒரு தவநிலை எனக்கூறும் வள்ளுவனார், அந்த இல்வாழ்க்கை அறவாழ்க்கையாக, பிறர்பசி போக்கும் நோக்குடையதாக அமைய வாழ்க்கைத்துணை நலம் நன்றாக அமைய வேண்டுமெனச் சூசகமாகச் சொன்னார்.

தந்தைக் கினிய மகளாய், கணவனுக்இியைந்த வாழ்க்கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைநலமாய் வாழ்ந்த அமரர் வள்ளியம்மை, "ஈதல்" என்ற பேரறத்துக்கும், இறைதொண்டுக்கும், கந்தக்கடவுள் பத்திக்கும் இலக்கணமாய் வாழ்ந்து முருகன் கழலினை அடைந்து இன்புற்றனர். அவர் ஆத்மா வள்ளி தெய்வயானை சமேத மஞ்சவனப்பதி முருகன் குஞ்கித பாதார நீழலில் இன்புற்றிருக்க நாம் இறைஞ்சுவோமாக.

ஆசிரியமணி எம். எஸ். ஸ்ரீதயாளன்
பீ. ஏ. டிப்புளோமா. இன் இடியூகேசன் (சிலோன்)
கல்வி அபிவிருத்திப்பிரிவு, கல்வி அலுவலகம்
கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.

❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋

- பாம்பும் அதன் மேற்சட்டையும் வெப்வேறானவை. அது போலவே, ஆத்மாவும் சரீரமும் வெவ்வேறானவை.
- ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களில் எது மேலோங்கி நிற்கிறதோ, அதற்கேற்ப மனிதர்கள் வேறுபட்ட சுபாவமுள்ளவர்களாக இருக்கின்றனர்.
- ஈசுவரனிடம் பக்தி இராதபடியால் தான் மனிதன் வெகுவாகத் துன்பத்துக்குள்ளாகிறான். அந்திம காலத்தில் ஈசுவரனுடைய ஞாபகம் வரும்படியான வழியை ஒவ்வொருவனும் தேடிக்கொள்ள வேண்டும். அவ்வழி யாதனில், ஈசுவரனிடம் பக்தி பூண்டொழுகுதலாம். முன்னரே ஒருவன் இப்படிப்பட்ட பக்தியிற் பழகுவானானால் அது அவனுடைய அந்திய காலத்திலும் நிச்சயமாக மனதிலெழும்.

*–ஸ்ரீ ராமகிருஸ்ண பரமஹம்சர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளியம்மைக்கு ஓர் அஞ்சலி.......

கொக்குவில் மேற்கு சண்முகம்பிள்ளை - நீர்கொழும்பில் பிரபலமான தொழிலதிபர் எனது நண்பர். நீண்ட காலம் பிள்ளைச்செல்வம் இல்லாமையால் காலஞ்சென்ற செனட்டர் த. நீதிராசாவையும் என்னையும் கூட்டிக்கொண்டு கதிர்மாமக் கந்தனைச் சேவிக்கச் சென்ற சண்முகம்பிள்ளை வள்ளியம்மன் தேவஸ்தானத்தில் பிள்ளைவரம் கேட்டு மனமுருக வேண்டிக் கொண்டார். அவர் வேண்டுதல் நிறைவேறியது வள்ளியம்மன் திருவருளால் ஒரு பெண்குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு வள்ளியம்மை என்ற பெயர் சூட்டி வளர்த்தார். வள்ளியம்மையின் நினைவாக மஞ்சவனப்பதிக்கு சித்திரத்தேர் அமைத்து சித்தம் மகிழ்ந்தார். வள்ளியமைக்கு கல்யாண வயது வந்ததும் ஏற்தொரு துணையை தேடி வைத்தியகலாநிதி அருள்பிரகாசத்தை தன் மகளுக்கு மணவாளனாக்கி மனம்நிறைந்தார் மாமனார். வள்ளியம்மை ஏழுபிள்ளைகளைப் பெற்று கணவனுடன் இன்புற்று வாழ்ந்தார். இவ்வுலகில் நீடூழி வாழ்ந்த வள்ளியம்மை இன்று நம்மை விட்டுப்பிரிந்து விட்டார். பிறந்தநாள் முதல் இறக்கும் நாள்வரை தந்தை போல் என்னை நேசித்த வள்ளியம்மை, இன்னும் சிலகாலம் வாழாமல் இறையடி சேர்ந்தமை எனக்கும் என் குடும்பத்தார்க்கும் தாங்கமுடியாத் துயர். மனைவியை இழந்த கணவருக்கும் அன்னையை இழந்த பிள்ளைகளுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து வள்ளியம்மையின் ஆன்மா வள்ளியம்மன் திருவடியில் இன்புறவேண்டி பிரார்த்திக்கின்றேன்

**கல்கி சி. சின்னத்துரை**

3, சாள்ஸ் ரெறஸ்
கொள்ளுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமிகு உடன்பிறவா அன்புச்சகோதரி "வள்ளியம்மை"

## சிவபதம் எய்தியமை குறித்த அஞ்சலி

08 – 04 –1998 புதன்கிழமை, மாலை நேரத்திற்கு சற்று பின்னதாக, எமக்கு ஒரு தொலைபேசி அழைப்பு கிடைத்தது. மதுரையக்கா இறந்து போனார் என்ற அந்த துக்ககரமான செய்தி. ஆனால் அதை நம்ப முடியவில்லை. இது ஒரு தவறுதலான செய்தியாக இருக்குமா? என எண்ணி, அவர்களுடைய அத்துல்கோட்டை வீட்டிற்கு, தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டோம். அங்கே அவர்களது வீட்டில் இருந்த ஒருவர் மூலமாக இச் செய்தி உறுதி செய்யப்பட்டது. சில நாட்களுக்கு முன்புதானே, அவவை நேரில் கண்டு கதைத்தோம். அப்பொழுது நாங்கள் இப்படி ஒரு நிலமை ஏற்படும் என்று எண்ணியிருக்கவில்லை.

அவரோடு கலந்து கதைக்கின்ற பொழுது, அவ்விடத்தில் இருக்கின்ற இறைபக்தியையும், ஆன்மீகத்திலே தன்னைத்தானே உணருகின்ற தன்மையையும் காணக் கூடியதாக இருந்தது. நாங்கள் ஏதாவது விளக்கம் கேட்டால், அதைப் பற்றி நீண்ட தொரு விளக்கம் கொடுப்பார். ஆன்மீகத்தை பற்றி கேட்டாலும் சரி, ஆன்ம ஈடேற்றத்தை பற்றி கேட்டாலும் சரி, இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம் போன்ற நூல்களிலிருந்தும் திருக்குறளிலிருந்தும் உவமை காட்டி, விளக்கம் அளிப்பார்.

இப்படியாக, தன்னைத் தானே உணருகின்ற ஆன்மீக சக்தி இருந்தனாலேயே, இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர், வத்தளையில் உள்ள தமது மகள் கிருபாசக்தியையும், மருமகன், பேரப்பிள்ளைகளையும், சந்தித்து அவர்களோடு தங்கி, உணவருந்தி, மழலைகளுடன் (பேரப்பிள்ளைகள்) மழலை பேசி மகிழ்சி கண்டாராயினும், தனது மகளினுடைய வீட்டிற்கு செல்ல வேண்டும் என்ற எண்ணம் தோன்றிய வேளையிலேயே, அவவினுடைய உடல் சோர்வுற்று இருந்த காரணத்தினாலும், தான் நீண்டகாலம் இந்த பூவுலகில் வாழ முடியாது என்பதை அறிந்து, இம் முறை அதிவிசேட வைத்திய வசதிகளைக் கொண்ட கொழும்பு நவலோகா மருத்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையில் சிகிச்சை பெற்றும், குணமாக்க முடியாது என்பதை அவரே உணர்ந்து, தமது பிள்ளைகளுக்கு, மறைபொருளாக உணரவைத்துள்ளார் என்பதிலிருந்து, அவர் தன்னைத்தானே அறிந்திருக்கிறார் என்பது புலனாகிறது.

அன்னார் பிறந்த ஆண்டிலே, மஞ்சவனப்பதி முருகனுக்காக அமைக்கப் பெற்ற அழகிய சித்திரத்தேர் அன்னாரை எக் காலமும் நினைவு கூர வைக்கும். அவர் இளமை பருவமாக இருக்கின்ற காலத்திலே வள்ளி, தெய்வயானை சமேதரராக முருகப் பெருமான் திருவீதி உலா வருகின்ற ரதத்தில் ஏறி வருவதில் மகிழ்ச்சி கண்டவர். திருமணமாகிய பின்னர் அவரும், கணவரும் பிள்ளைகளுமாக ஆலயத்திற்கு வந்து, திருவிழாவைச் செய்து முருகப் பெருமானின் திருவருள் பெற்று, மகிழ்வு கண்டவர்.

இளமைச் சாயலும், புன்முறுவல் தவழும்முகமும், பிறரை கவரும் தோற்றமும், இனிய பேச்சும், சேவை மனப்பாங்கும், பிறர் உணர்ச்சிகளை மதித்தலும், வந்தோரை வரவேற்று உபசரிக்கும் விருந்தோம்பல் போன்ற குணநலங்களை உடையவர். மதுரையக்கா என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுபவர்.

அவர் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் அனுபவித்து, தற்போது. பேரின்ப பெருவாழ்வு என்ற வீடுபேறு கிடைக்கப் பெற்றுள்ளார். அன்னாரது பிரிவால் துயருறும் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவருக்கும், எங்கள் அனைவரதும் உள்ளம் நெகிழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய, எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்"*

319/15, செட்டியார் தெரு,
கொழும்பு 11

**திரு. வி. பொன்னம்பலம் குடும்பத்தினர்**
அரசடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்தும் மறையாத

### அமரர் திருமதி. வள்ளியம்மை அருள்பிரகாசம் அவர்கள்


அமரர் ச. வே. சண்முகம்பிள்ளை இராசம்மா தம்பதியினருக்கு ஏகபுத்திரியாக திருமதி. வள்ளியம்மை அருள்பிரகாசம் அவதரித்தார். அன்னாரின் பெற்றோர் குழந்தைச் செல்வம் வேண்டி கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் மேல் மிகுந்த பற்றுக்கொண்டு தாமாகவே இந்தியாவிலிருந்து ஸ்தபதியரை வரவழைத்து திருத்தேர் ஒன்றினை மிகுந்த கலை அம்சங்களோடு இலங்கையில் வேறு எங்கும் இல்லாதமுறையில் அமைத்துக் கொடுத்தனர்.

அன்னார் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி அருள்பிரகாசம் அவர்களை திருமண வாழ்வில் இல்லறம் நிறவுற்று மக்கட் செல்வங்களை பெற்றார் அவர்களும் தக்கார் தகவிலார் அவர்மதம் எச்சத்தால் காணப்படும் எனும் வள்ளுவர் வாக்கிற்கு அமைய நிறை வாழ்வு வாழ்வதை தாம் வாழம் காலத்தில் கண்டவர் அமரர் கருவிலே திருவுடையவராக இருந்தமையால் முருகனின் திருப்பணிகளை நிறைவுறக் கண்டவர் அன்னார் பூரண வாழ்வு வாழ்ந்தவர் அன்னையை இழந்து தவிக்கும் அவர்தம் தம் செல்வப்பிள்ளைகளுகும் மனைவியைக் இழந்து தவிக்கும் அவர்தம் கணவருக்கும் எமது குடுமபத்தினாரின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அவர் வணங்கும் தெய்வமாகிய முருகப் பெருமானை வணங்கி ஆத்மாசாந்தியடையப்பிராத்திப்போமாக!

**வை. சற்குணம் குடும்பதினர்,**
**கொக்குவில் மேற்கு**
**கொக்குவில**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சம் மறவா நன்றிகள்

அமரத்துவம் எய்திய எங்கள் குடும்ப ஒளிவிளக்கு வள்ளியம்மை அவர்களின் மரணச்செய்தி அறிந்து, ஓடோடி வந்து, உதவிகள் பல புரிந்தும், அன்னாரது மரணச் சடங்கில் கலந்து கொண்டும், இறுதி ஊர்வலத்திலும் கனத்தை இந்து மயானத்திலும் நேரில்வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், உள்நாட்டில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் தபால்கள் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறிய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் 08-05-1998ல் நடைபெற்ற அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்ட அனைவருக்கும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மதிய உணவில் பங்குபற்றி அனைவருக்கும், இந் நினைவு மலரை நல்ல முறையில் அச்சடித்து உதவிய அச்சுக்கூடத்தாருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*இங்ஙனம்,*
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**

910/04, அத்துள்கோட்டை,
கோட்டை, கொழும்பு,

"குகஸ்தான்"
கொக்குவில்மேற்கு, கொக்குவில்.

## Heartfelt Gratitude

We Sincerely Thank the Clergies, State officials, Relations and friends who attended the funeral, Sent Sympathy Cards, Messages of Condolence, and helped us in Numerous other ways During our period of grief . We also thank those who attended the Alms giving Pooja and joined us in Lunch thereafter on the 8th of May 1998, and to those who helped to Print this book in good Manner.

We regret our inability to thank Personaly.

***Dr, R. Arulpiragasam & Family***

910/4, Ethulkotte,
Kotte.
08-05-1998

"Kugasthan"
Kokuvil - West
Kokuvil

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஞ்சவனப்பதி முருகன் ஆலய சித்திரத்தேர்

Immage N Print by
*Bougainvilla*
People's Park
Colombo-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org